விலை சதம் 60

பக்கங்கள் 10

பாவியுங்கள்!
அண்ணா பற்பொடி
பைக்கட் – 20சதம்
பாவித்த மக்கள்
மீண்டும்
விரும்பிப் பாவிப்பது
அண்ணா பற்பொடி

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1980-1-28
PERIODICALS DIVISION
LIBRARY

மில்க்வைற்
அப்பியாசக்கொப்பி'
மாணவ மணிகளே!
மில்க்வைற் நீல சோப்
அல்லது 5 பார் சோப்
அல்லது 5 சலவைப் பவு
டர் பெட்டி மேலுறைகளை
அனுப்பி மேற்படி
அப்பியாசக் கொப்பியையும்
நேரசூசியையும்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் – யாழ்ப்பாணம்

மலர் 21 | தை 13 | ரபி அவ் 8 | ஞாயிற்றுக்கிழமை | (27 – 1 80) | இதழ் 349

எண்ணெ விலை உயர்வை சாட்டாக வைத்து

பாவனைப் பொருட்களின்

# விலைகளை அதிகரித்தால்

# கடுப் நடவடிக்கை

## லலித் எச்சரிக்கை

(கொழும்பு)

பாவனைப் பொருட்களின் எண்ணெ விலை அதிகரிப் விலைகளை அதிகரிக்கும் பைச் சாட்டாக வைத்து வர்த்தகர்கள் மீது கடும் வேண்டுமென்றே ஏனைய நடவடிக்கை எடுக்கப்படுமென்று வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத் முதலி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாவனைப் பொருட்களின் விலைகளை அளவுக்கதிகமாக அதிகரிக்கும் வர்த்தகர்களுக்கு பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் உட்பட கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் தமது எச்சரிக்கையில் தெரிவித்துள்ளார்,

பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும் லொறி, வான் போன்ற கனரக வாகனங்கள் டீசல் எண்ணெயிலேயே இயங்குகின்றன என்றும் டீசலின் விலை கலனுக்கு 3 ரூபா மட்டுமே அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்த அமைச்சர் இதைச் சாட்டாக வைத்து பாவனைப் பொருட்களின் விலையை அதிகரிக்கவேண்டாம் என்றும் வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

எண்ணெ விலை ஏற்றத்தினல் வாழ்க்கைச் செலவு இன்று உலகரீதியில் அதிகரித்துள்ளதென்றும் அமைச்சர் கூறினர்.

(இ)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் சித்தார்த்தி வருடம் தைத்திங்கள் 14-ம் நாள் (28-1-80) திங்கட்கிழமை காலை 10.00 மணி முதல் 11-30 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| எமது புதல்வன் | எமது புதல்வி |
| --- | --- |
| கணேசலிங்கம் (உரிமையாளர்: 'சிப்சைட்' யாழ்ப்பாணம்) அவர்களுக்கும் | கணேசராணி அவர்களுக்கும் |

புலோலி தெற்கு புற்றளை பிள்ளையார் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கும் அதன் பின் அன்று மாலை 6 மணிமுதல் மணமகன் இல்லத்தில் நடைபெறவிருக்கும் வரவேற்பு வைபவத்திற்கும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
| --- | --- |
| க. பொ. தம்புசாமி தம்பதிகள் (சிப்சைட்-கொழும்பு) 'செல்லகிரி' 105, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். | க. நா. சுப்பிரமணியம் தம்பதிகள் (விலைமதிப்பு ஆணையாளர்) புலோலி மேற்கு, புலோலி. |

4792

உ
சிவமயம்

## புதுக்கடைத் திறப்புவிழா

அன்புடையீர்,

நிகழும் சித்தார்த்தி வருஷம் தை மாதம் 14-ந் திகதி (28-1-80) திங்கட்கிழமை முற்பகல் 10-10 மணி முதல் 11-02 மணி வரை வரும் இடப லக்கின சுப முகூர்த்த வேளையில்,



யாழ்ப்பாணம், கன்னாதிட்டி
15-ம் (68 J) இலக்கத்தில்
புதிதாக அமைக்கப்பெற்ற
க. ச. தங்கராசா
நகைமாளிகை

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்த நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் குடும்பசமேதராக வருகை தந்து மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

கொண்டாட்டம் 3 நாட்கள் நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்

15, (68 J) கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

க. ச. தங்கராசா, உரிமையாளர்.

தங்கராசா நகை மாளிகை,
உடுப்பிட்டி.

(4759)

## தடுப்புக்காவலில் இடிஅமின்

திரிப்பொலி, ஜன 26

உகண்டாவின் முன்னாள் அதிபர் ஜெனரல் இடிஅமின் லிபியாவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லிபியாவில் அரசியல் தஞ்சம்புகுந்திருந்த இடி அமின், தமக்குத் தொடர்ந்து ஆதரவு தரவேண்டும் என்று லிபியா தலைவர் கேர்ணல் கடாபியிடம் வாக்குவாதம் செய்ததைத் தொடர்ந்தே காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

(இ)

## ஆப்கான் அதிபர் இந்திராவுக்கு கடிதம்

காபூல், ஜன. 26

அமெரிக்க ஏகாதிபத்திய நடவடிக்கைகளினலும் சீனவின் தந்திரோபாயம் காரணமாகவுமே சோவியத் படைகள் ஆப்கானுக்கு அழைக்கப்பட்டன.

இவ்வாறு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி [illegible] இந்தியப் பிரதமர் திருமதி இந்திராவுக்கு [illegible] மூலம் தெரிவித்துள்ளார்.

## இந்திய குடியரசு அணிவகுப்பில் சோவியத் ஆயுதங்கள்

புதுடில்லி, ஜன. 26

இந்தியாவின் 31-வது குடியரசுதின அணிவகுப்பில் சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களும் எடுத்துச்செல்லப்பட்டன

பிரெஞ்சு அதிபர் வலரிகிஸ்காட் டெஸ்டா பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் முன்னாள் அதிபார குத்துச்சண்டை சாம்பியன் ஜனுப் முகமதலி உட்பட பல வெளிநாட்டுப்பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

### சேலையுடன் இந்திரா

பிரதமர் திருமதி இந்திரா காந்தி மண்ணிறச் சேலையுடன் வெள்ளை கோட் அணிந்து வைபவத்திற்கு வந்திருந்தார்.

(இ)

## நீண்ட நேரம் நடந்த கூட்டணி இ. பேரவை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் பாராளுமன்றத்தில் பிரதம மந்திரியை பாராட்டிப் பேசியதையடுத்து இளைஞர் பேரவைக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே எழுந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல் நேற்று இரவு நீண்டநேரமாக நடைபெற்றது.

தெல்லிப்பளையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கூட்டணி எம்- பிக்களும் இளைஞர் பேரவை உறுப்பினர்களும் நீண்ட நேரமாகத் தமது கருத்துக்களை எடுத்துக் கூறினர்.

(இ)

யாழ் நகர மக்களே !
உங்கள் முதலீட்டுக்கு...
● அதிக பாதுகாப்பு
● அதி உயரிய வருமானம்
● சிறந்த உத்தரவாதம்
வழங்குவதோடு...
ஃ லொறிகள், வர்த்தக வான்களுக்கு பினன்ஸ் கடன் வசதிகள்
ஃ இறக்குமதிப் பொருட்களுக்கு அடமானக் கடன் வசதிகள்
முதலானவற்றையும் உங்கள் வசதி கருதி வழங்குகின்றோம்.

உங்களுக்கு அதி சிறந்த சேவை வழங்கவென ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

18 வீதம் வருடமொன்றுக்கு மாதாந்த வட்டி
20 வீதம் 2 வருடங்களுக்கு மாதாந்த வட்டி
24 வீதம் 2 வருடங்களுக்கு காலமுதிர்வு வட்டி
● குறைந்தபட்ச வைப்பு ரூபா 500 மட்டுமே!
விபரங்கட்கு:
மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதி நிறுவனம்
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8267

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

தமிழ், கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த நல்லொழுக்கமுள்ள அழகான படித்த 29 வயதுடைய தங்கள் கடைசித் தங்கைக்கு அவரது வெளிநாட்டில் வேலை பார்க்கும் அண்ணன்மார் மணமகனைத் தேடுகின்றனர். யாழ்ப்பாணத்தில் வீடு, தகுதிக்கேற்ப பணம், நகை ஆகியன சீதனமாகத் தரப்படும். விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 4749,
C/o ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

4749

## இலுப்பை மர விற்பனை

மானிப்பாய் "அருள்மனை"யில், முன்னைநாள்
**அமெரிக்க மிஷன் அச்சக வளவில்**
ஒரு பெரிய இலுப்பை மரம் விற்பனைக்கு உண்டு.
விரும்புவோர் மரத்தைப் பார்வையிட்டு
பின்வரும் விலாசத்திற்கு விலை விபரங்களுடன்
பதிவுத்தபாலில்
மாசி மாதம் 5-ந் திகதிக்கு முன் (5-2-1980)
மனுப்பண்ணவும்.

தனதிகாரி,
அமெரிக்க இலங்கை மிஷன்
ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

4814

## பரதநாட்டிய அரங்கேற்றம்

சாவகச்சேரி திலகநர்த்தனாலய
செல்வி யசோதரா சபாரத்தினம்
அவர்களின் மாணவி
**செல்வி தயாநந்தி அமிர்தலிங்கம்**
அவர்களின்
**பரதநாட்டிய அரங்கேற்றம்**
சாவகச்சேரி நகராண்மைக் கழகத் தலைவர்
திரு. எஸ். கே. திரவியநாயகம்
தலைமையில்
நாளை திங்கட்கிழமை மாலை 6-00 மணிக்கு
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அரங்கில்
நடைபெறும்.

4807

## இன்றும்....

**வீரசிங்கம் மண்டபத்தில்**
**மரிக்கார் ராம்தாஸின்**
**கிறேஸி கோமாளிகள்**

சரியாக மாலை 6 30 மணிக்கு

டிக்கற் கிடைக்கும் இடங்கள்
கௌரி டெக்ஸ்டைல்ஸ் நவீன சந்தை
நியூ விக்டேஸ் மணிக்கூட்டு வீதி
மண்டப வாயிலிலும் பெறலாம்.

கடந்த முறை இருந்த நெருக்கடிகள் அனைத்தையும் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டிக்கட்டுகளுக்கு முந்துங்கள்

4816

## விளம்பரம்

### வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 4000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனையாகவுள்ளன. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களை முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 1-2-80 வெள்ளிக்கிழமை மாலை 2-30 மணிக்கு முன்னதாகச் சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். கேள்விப்பத்திர வைப்புப்பணம் ரூபா 500/- ஆகும்.

இங்ஙனம்
**பொது முகாமையாளர்,**
அளவெட்டி-பல்லாகம்
ப. நோ, கூ. சங்கம்.

23-1-80. 4780

### இருசு லொறி திருத்த வேலைக்கு கேள்வி கோருதல்

**ஊர்காவற்றுறை**
**ப. நோ. கூ. சங்கம்**
**ஊர்காவற்றுறை.**

1. ரிங்கர் வேலை.
2. முன்கூடாரம் புதிதாக அமைத்தல்.
3. பின் கூடாரம் பழுது பார்த்தல்.
4. இன்ஜின் வேலை செய்தல்.
5. கின் பின் அடித்தல்.
6. மை பூசுதல்.

மேற்படி திருத்த வேலை செய்து புனரமைப்பதற்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை 15-2-1980க்குமுன் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கவும்.

பொதுமுகாமையாளர்
ஊர்காவற்றுறை,
1980.1-18. 4799

### ஆசார்யாபிஷேகம்

(குருப்பட்டம் வழங்கல்)

28-1-1980 திங்கட்கிழமை காலை 10 மணிமுதல் 11மணி வரை நிகழும் மீனலக்கின சுப முகூர்த்தத்தில் அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் புத்திரனும் நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணியசாஸ்திரிகள் அவர்களின் மாணவனுமாகிய **முரளீதர சர்மாவுக்கு** கோப்பாய் சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்களால் ஆசார்யாபிஷேகம் செய்ய (குருப்பட்டம் வழங்க) திருவருள் கூடியுள்ளது.

இங்ஙனம்
சிவஸ்ரீ இ.சுப்பிரமணிய குருக்களும்,
பாரியாரும்

4712

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வாகனம் ஓட்டுவதற்கான சான்றுப்புத்தகமும், காப்புறுதிப்பத்திரமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவம் ரெக்ஸ்ரைல்ஸ், 54, சுருவில் வீதி, ஊர்காவற்றுறையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 4806

### கேள்வி விளம்பரம்

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்திலுள்ள பின்வரும் பொருட்களை கொள்வனவுசெய்ய விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. திருப்பிச் செலுத்தப்படும் கட்டுப்பணம் ரூபா 250,-ம், திருப்பிச் செலுத்தப்படாத கட்டுப் பணம் ரூபா 15/-ம் ஆகியவற்றைச் சங்கத்தில் செலுத்தி பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

கேள்விப்பத்திர முடிவுதிகதி 9-2-80 பி. பகல் 4-00 மணி. கேள்விப்பத்திரங்கள் 10-2-80 மு. பகல் 10-00 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திரத்தில் தெரிவுசெய்யப்படுபவர் 15-2-80க்கு முன் பணம் செலுத்திப் பொருட்களை அப்புறப் படுத்தல்வேண்டும்.

**பொருட்களின் விபரம்:**

1. வெற்றுச் சாக்குகள்.
2. பாவித்த லொறி ரயர், ரியூப்புக்கள்.
3. கழிவு கடதாசிகள், மட்டைகள்.

**பொதுமுகாமையாளர்.**
4779

### யாழ். மாநகராட்சி மன்றம்

### கேள்வி அறிவித்தல்

கன்னாதிட்டி, காளிகோவில் குளத்தில் வளர்ந்திருக்கும் நாயாவாடிச்செடிகளை (சல்வினியா) அகற்றி, அப்புறப் படுத்துவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 08-02-80ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல்வேண்டும். இதற்கான கேள்விப்பத்திரப் படிவத்தை ரூபா 5/-செலுத்தி இவ்வலுவலகத்தில் 05-2-80க்கு முன் பெற்றுக்கொள்வதுடன் ரூபா 100/- கேள்விப்பத்திர வைப்புப்பணமாகச் செலுத்தி வைத்தல்வேண்டும்.

சித்திபெற்ற கேள்விக்காரர் ஒரு குறிப்பிட்ட பிணைப் பணத்தைச் செலுத்தி மாநகரசபையுடன் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளவேண்டும்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
24-1-80. 4304

### விற்பனைக்கு

பாலுடன் ஆடும் குட்டிகளும், ஒரு கிடாயும் விற்பனைக்கு உண்டு. நேரில் 2, பி. ஏ. தம்பி ஒழுங்கை இல்லத்தில் தொடர்புகொள்ளவும். 4813

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் தென்னை, மா, பலா ஆகிய மரங்கள் அடங்கிய கிணற்றுப் பங்குடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க சி. ஆர். எஸ். பிள்ளை, நிம் பில்டேர்ஸ், 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 4811

Akai - 1710 ரேப்றெக்கோடர், National Panasonic SG-2800 - 50 Watts. ரியூனர், அம்பிளிபயர், இரண்டு ஸ்பீக்கர்களுடன் உள்ளது. ஸ்ரான்லி கோப்பரேசன், 79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4803

7சிறி Ford Escort ரேடியோ கஸெட்டுடையது விற்பனைக்குண்டு. 'லிங்க வாசா,' நவாலி வடக்கு, மானிப்பாய். 4801

எம். ஐ. (M. I.) இனமிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க. வ. தம்பிராசா, ஆலடி வீதி, தச்சன் குளம், வவுனியா 4798

நல்ல பதினொரு வேப்பமரங்கள் விற்பனைக்குண்டு. 7-2-80 வரை நேரில் பார்வையிடலாம். இயக்கச்சி சந்தியிலிருந்து கோயில்வயல் றோட்டில் 2ம் மைல் கல்லடியிலுள்ள கணேச தோட்டம், இயக்கச்சி. 4791

### தேவை

பட்டிவேர் தொகையாக தேவை. நல்லவிலை கொடுக்கலாம். கொண்டுவரவும். P.M. நாகரெத்தினம் செட்டியார், 15 17, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 4802

### வாடகைக்கு

157, நாவலர் வீதியில் (K.K.S. நாவலர் சந்தி) கடை ஒன்று வாடகைக்குண்டு. விபரங்கட்கு: 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4810

Brownson
**வாங்குங்கள்**
**பிரவுண்சன்**
**அரறூட்-மா**
பிரவுண்சன் அரறூட மா
அரச உணவு மருந்துச் சட்டத்தின்
கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டது.


ஆதரவாளர்களுக்கு எமது இனிய
**வாழ்த்துக்கள்!**
சகலவிதமான ஐஸ்கிறீம் வகைகளுக்கும், மட்டன் றோல், கட்லற், பற்றீஸ், லட்டு, மஸ்கட், கேக் போன்றவற்றிற்கும் தேநீர், கோப்பி, குளிர்பான வகைகளுக்கும் உடன் விஜயம்செய்யுங்கள்.

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

Taste our Danish imported 'LIDANO' Special Ice cream in three flavours Vanilla, Strawberry & Chocolate.
73, கஸ்தூரியார் வீதி
HELLO 8077
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் போட்ட செஞ்சரி!



''ஏண்டி ஜெயந்தி மணி நாலாகப்போகிறதே? நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?''

அம்மா கேட்கிறாள். அம்மாவுக்கு அவசரம். அந்த அவசரத்திலும் துளிர்த்து நிற்கும் நம்பிக்கையை என்னால் ஊடுருவி உணர்ந்துகொள்ள முடிகிறது.

அடபோதான் உள்ளே நுழைந்த அப்பா என்னைக் கேள்விக்குறியுடன் பார்க்கிறார்.

எனக்குப் புரிகிறது, புரிந்தாலும் மனசில் ஆவல் முகிழ் உடைக்கவில்லை. சம்பிரதாயச் சடங்குதான் என்கிற எரிச்சலான எண்ணம்.

இந்த ஒரு காரணத்துக்காகவே எத்தனை தடவைகள் அரை நாள் லீவு போட்டாயிற்று. ஆரம்பத்தில் நமக்கும் திருமணம் நடக்கப்போகிறது என்கிற குதூகலமான நினைப்பில் முழுநாள் விடுமுறை எடுத்துக்கொண்ட ஞாபகம். நேரம் பொன் என்பார்கள் நான் 'வேஸ்ட்' ஆகிவிட்டேன் என்ற ஆதங்கமான நினைப்பு இப்போ போகப்போக பெண் பார்க்க யாராவது வருவதும் நான் அரக்கப்பரக்க அலங்கரிப்பதும் சர்வசாதாரணமான நிகழ்ச்சியாகிவிட்டது.

ஹ்ஹூம் எப்போ ஆண்டவன் வழிவிடப்போகிறானோ? இவளுக்குப் பின்னே இரண்டு பெண்கள் முண்டிக்கொண்டு வளர்கிறார்கள். நம் நிலைக்கு ஏற்றாற்போல் நல்ல இடமாக எப்போ அமையப்போகிறது?

அம்மாவின் ஆதங்கமான பேச்சும், அப்பாவின் இயலாமையின் நெடுமூச்சும் மிச்சப்பட்டு நின்றபோது எனது பருவகால ஏக்கங்கள் எண்ணங்கள் வர்ணமற்ற வெற்றுக்கோடாக வெறுமையுடன் நின்றுவிட்டன.

'இன்று வண்ணப் பொடியுடன் யாரோ ஒருத்தன் வரப்போகிறான். ஆண்டவன் போட்ட 'ஸ்கெட்ச்' சரியாக விழுந்திருந்தால் வர்ணம் வடிவம் போடும்''- நான் அலுப்புடன் நினைத்துக் கொள்ளுகிறேன்.

''சாதாரண கிளார்க்கான அப்பர்! அவருக்கு நான் உட்பட மூன்று பெண்கள். ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி! அப்பாவோ சாதாரண கிளார்க். எப்படியோ குடும்பத் தேரைக் கட்டியிழுத்து, நம்மைப் படிக்க வைத்தும் இருந்தார். பி. ஏ. வரை படித்த நான், இரண்டாண்டு காலம் அலைந்து ஒரு வேலையைத் தேடிக்கொண்ட போது வயது இருபத்தேழு அப்புறம் அம்மா என் சின்ன சம்பாத்தியத்தில் மீதம் வைத்து செய்துபோட்டிருந்த ஒரு சங்கிலி, ஒரு ஜோடி வளையல்- இவற்றுடன் என் திருமணப் பேச்சு ஆரம்பமாகியது. ஒரு ஆணுடன் இணைந்து வாழ ஒரு பெண்ணுக்கு வேண்டிய எல்லா அம்சங்களும் இருந்தும் என்ன; அவர்கள் கண்களில் கனலாய் எரியும் சீதனம் என்கிற நெருப்பு கொழுந்துவிட்டெரியுமளவிற்கு நம்மிடம் இல்லாததால் இன்றுவரை அதற்காக வேள்வித்தீயை அப்பா வளர்த்துக் கொண்டிருக்கிறார். பெண்ணைப் பெற்றதற்காக இப்படியொரு தண்டனையா? காலம் பூரா ஒருத்தனுக்கு சுகத்தைக் கொடுத்து, இன்பத்தைத் தந்து, துன்பத்தைப் பகிர்ந்து, சந்ததியைப் பெற்று சம்ரட்சிக்க வென்று ஒருவனுக்காக பெண்ணைத் தருகிற பாவத்திற்கு கூலியாகசீதனம்?

நாம் அவர்களைக் குறை கூறி என்ன பலன். பெண்ணைப் பெற்றவர்களே முண்டியடித்துக்கொண்டு போட்டி போடுகிறார்கள். அங்கே இருபது கேட்டீர்களா? நான் இருபத்தையாயிரம் தருகிறேன் என்னுமளவிற்கு கல்யாணச் சந்தையில் மாப்பிள்ளையை ஏலப்பொருளாக நிறுத்துகின்றார்கள்.

எதுக்காக நம்போன்ற பெண்கள் இப்படி வேகாமல் வெந்துவாழ முயலவேண்டும். அப்படி என்னதான்......?

எனக்குள் எழுந்த நினைவுகள் அதிதமான எரிச்சலை ஏற்படுத்துகிறது, சமையலறையில் ஏதோ எண்ணெயில் போட்டு எடுக்கும் 'சொய்' என்ற சத்தம் என் சிந்தனையைக் கலைக்கிறது.

புத்தகக் கட்டை உள்ளே வைத்துவிட்டு என் அருகே வருகிறாள் தங்கை சுபா!

''அக்கா! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? கோட்டை விழுந்துபோனது மாதிரி உன் மூஞ்சி பார்க்க நன்றாயில்லை'' என்றவள் தொடர்ந்து 'ஓகோ' அதுவா விஷயம். பலகார வாசனையை மூக்கை சுளித்து உறிஞ்சியபடி உள்ளே ஓடுகிறாள்.

அந்த இளமைத் துள்ளலை நான் புன்னகையுடன் ரசிக்கிறேன். ஓ! மரத்துவிட்டன என நினைத்த உணர்ச்சிகளிலும் ரசனைத்துளி மிச்சமிருக்கிறது. தெருவின் திருப்பத்தில் காரின் ஒலி கேட்கிறது! என்னை மிஞ்சிய ஒரு பரபரப்பு! சமையல் கட்டிலிருந்து அம்மா கரண்டியும் கையுமாக என்னை எட்டிப் பார்த்து விழிகளாலேயே இரக்கிறாள்.

வண்டி வீட்டைக் கடந்து போகிறது.

நான் எழுந்து கிணற்றடிக்கு செல்கிறேன். சோப்பை குழைத்து பூசி, முகத்தில் தேய்ச்சு கழுவுகிறேன். கண்களில் சோப்பு நுரை தந்த எரிச்சல் மனசின் எரிச்சலாகிறது.

பெண்கள்,

சமத்துவம் பேசுகிறார்கள், கொடி பிடிச்சு ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். என்னென்னவோ கேட்டு கல்யாணம் என்று வரும்போது 'கப்சிப்' 'எப்படியாவது அப்பா கேட்டதைத் தந்து வாழ்க்கையை அமைச்சுக் கொடுங்க' என்று கூறுமளவிற்கு மனசு இறங்கிவிடுகிறது.

சே! விற்பனைக்கு பொம்மைகளை வர்ணம்தீட்டுவதுபோல் பளிச்சென்று தெரிவதற்காக என்னென்னவோ அலங்காரங்கள் செய்து பார்வைக்கு வைப்பதுபோல் இந்த பெண்ணினத்தை ஜோடித்து கண்காட்சிக்கு வைப்பதும் பெண்பார்த்து பிடிக்கவில்லையென்று கூறி கடூரமாக அவமானப்பட வைப்பதும்... அப்பப்பா பெண்மை ஏன்தான் இப்படியெல்லாம் அவஸ்தைப் படுகிறதோ!

'சபலபுத்தி உள்ளவர்கள் யாருக்காவும்எந்தப்பெண்ணும் தன் வீட்டுக் கதவைத் திறக்காமல், சீர்கொடுத்து புருஷனை வாங்குவதற்கு யாரும் போட்டாபோட்டி போடாமல் மனசையும் உணர்ச்சிகளையும்இறுக்கிக்கொண்டால் போக்கிடமற்ற ஆண்மை வழிக்குவரும். என் சிநேகிதி ஒருத்திகூறியது ஞாபகத்திற்கு வந்தது. இது சாதிக்கக்கூடியகாரியமா என்று பெண்மையே சீர்கெட்டு சாலை தெருவழியே போட்டுக்கிடக்கும் போது...இந்த வேதாந்தம் யாருக்கு பயன்தர முடியும். யாரால் முடியும்!

'ஏன் முடியாது?'

என்கேள்வியே என்னுள் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது. அது ஏற்படுத்திய அழுத்தம் என்னுள் ஒரு திருப்தியைக் கொடுக்கிறது.

## ஜெனி லூட்ஸ்

நமஸ்கர்ரம் பண்ணிய நான் நிமிர்ந்துபார்க்கிறேன். மாப்பிள்ளையாக வந்தவனைப் பார்த்ததும் எனக்குள் ஒருதிகைப்பு! அவன்கூட ஒருகணம் திகைப்பது போன்று இருந்தது.

அங்கே இருப்புக்கொள்ளாமல் எப்படியோ உள்ளே திரும்பிய நான் மீண்டும் ஒரு முறை யன்னல் வழியாக அவனைப்பார்த்தேன். என் சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள.

சந்தேகமில்லை! ஒரு வருஷத்துக்கு முந்தி நம் கொம்பனியில் வேலைக்கு சேர்ந்த ஈஸ்வரன். சில நாட்களில் வேறு கிளைக்கு மாற்றப்பட்டவன் பெண்கள் விஷயத்தில் கொஞ்சம் தாராள மனசு என்ற கேள்வி? அதில் என் சிநேகிதி ஒருத்தியும் ஏமாந்துபோய் விட்டதை கூறி வருத்தப்பட்டிருக்கிறாள்.

என் மனதில் விபரிக்கமுடியாத ஒருவித தகிப்பு!

இடையிடத்தில் ஒருபெண்ணை நிறுத்தினால்...? கெட்டுப்போனவளை - நம்பி மோசம்போய் விட்டவளை - ஏமாற்றப்பட்டவளை ஏற்றுக்கொள்ளமுடியாத குறுகிய மனப்பான்மையுள்ள இவர்கள் எப்படியெப்படியெல்லாம் குதறுவார்கள். ஆனால் இவர்களைக் குதறுவதற்கு யாருமே இல்லையா? நாலு வார்த்தையாவது சுடச்சுடக் கேட்டுவிடவேண்டும் என்கிற ஆக்ரோஷம்!

அவர்கள் 'ப்ரீட்' முடிந்து சம்பிரதாயமான பேச்சை ஆரம்பிக்கவுள்ள ... உங்க நிலைமைஎங்களுக்கு தெரிதற்கு பெண்பெற்ற ஏழை அப்பாக்களை சாதமாக்கிக் கொள்கிறார்களோ...?

'ஒவ்வொருத்தனும் தனக்கு வர்றவ நல்லவளாக -தூய்மையுடையவளாக இருக்கணும் என்கிற அளவுக்கு தன்னை ஒழுக்கசீலனாக வைத்துக்கொள்கிறானா? அந்த தன்மையை பெண் எதிர்பார்க்மாட்டாளா? அத்தனை தூரத்துக்கா அவள் ஏங்கிப்போய்க் கிடக்கிறாள்?' என் மனதில் எழுந்த வினா மறைவதற்கு முந்தியே நான் அப்பாவை அவசரமாகஅழைக்கிறேன்.

உள்ளே வந்த அப்பா மனக் குழப்பத்துடன் என்னை நோக்குகிறார். ஒரு விநாடி அந்தப் பரிதாபமான ஏழைத் தந்தையின் விழிகள் என்னைப் பேசவிடாமல் செய்தன.

மறுகணம் பெண்ணுக்கொரு நீதி! ஆணுக்கொரு நீதியா என்கிற ஆத்திரம் கிளர்கிறது.

'அப்பா! இந்தக் கலியாணத்திற்கு எனக்கு கொஞ்சம்கூட விருப்பமில்லை!'

'ஜெயந்தி நீ என்னம்மா சொல்கிறாய்...?'

'எனக்கு இஷ்டமில்லை என்கிறேன்.'

'நன்றாயில்லையம்மா நீசொல்வது. பெண்ணுக்கு அழகு இது இல்லையம்மா! அடக்கம் இல்லாதவளென்று நாலுமாதிரி பேசுவாங்கள்' என்கிறார் அப்பா!

பேசட்டும் அப்பா! நியாயத்துக்காக வாதிடும்போது அடக்கமில்லாதவன்னு பேர்கிடைக்கும் என்றால் தாராளமாகக் கிடைக்கட்டும்!'

கிறது. அதிகமாக நாம் எதையும் எதிர்பார்க்கலே. உங்கள் மகளை எங்க மகனுக்கு பிடித்துப்போச்சு, அவ்வளவும் போதும். மற்றப்படி நீங்கள் ஏதாவது பெண்ணுக்கு தர இஷ்டப்படுவதை தந்தால் சரிதான்.'

அந்தப் பெரியவர் இப்படிக் கூறியதும் அப்பாவின் முகம் நன்றியுடன் மலர்கிறது. என் மனம் வெறுமையுடன் கூம்புகிறது,

'அது சரியுங்க, உங்களுக்குப் பிடிச்சிருந்தா போதுமா?' அப்பா கேள்விக் குறியுடன் நிறுத்துகிறார், அவர் எப்போதுமே நிதானம்தான்!

திரும்பி மகனைப் பார்க்கிறார் தந்தை, அவன் அழகாக புன்னகைக்கிறான்.

தொடர்ந்து அவன் தந்தையே கூறுகிறார்!

அவன் இந்தக் காலத்திலே கிடைக்காதபிள்ளை.பாருங்கோ எத்தனையோ இடங்களிலிருந்தெல்லாம் சீர்வரிசையுடன் பெண்தர முன்வந்தும் இவன் மறுத்துவிட்டான், 'அப்பா எனக்கு பணத்தோட வர்றவ தேவையில்லை. குணத்தோட வர்றவதான் தேவையின்னுட்டான்'' பெருமையடித்துக் கொள்வதுபோல் எனக்குப்படுகிறது.

இப்படி எத்தனை பேருடைய கிருஷ்ணலீலைகளை மறைப்ப

எதிர்த்து பேசியறியாத நானா இப்படி பேசுகிறேன், எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. தொடர்ந்து நான் கூறுகிறேன் சற்று உரக்க,

'அப்பா! பெண்கள்மட்டும் தான் குணத்தோட வாழனும் என்றில்லை!

மனிதனாகப் பிறந்த யாருக்குமே ஒழுக்கம் அவசியம். இதில் ஆண், பெண் என்கிறதற்கு இடமேயில்லை. பெண்ணுக்குத்தான் கற்பு என்றொன்று இருக்கு என்றால் ஆண் என்ன மிருகமா? அங்கேயும் ஆறறிவைத்தான் ஆண்டவன் வைச்சிருக்கிறான். தனக்கு வருபவள் தூய்மையுள்ளவளாக இருக்கவேணும் என ஆண் நினைப்பதுபோல் பெண்ணும் நினைக்கலாமல்லவா? பெண்களும் இனி ஆணைப்பார்த்துத்தான் கல்யாணத்துக்கு சம்மதிப்பார்கள்.

கூறிவிட்டு கூடத்தைப் பார்க்கிறேன்,

அம்மா தனக்கே உரிய பாணியில் உரத்து கத்துகிறாள்,

'ஏன்டி பாவிப் பேண்ணே இத்தனை நாளும் சாதுவாக இருந்துட்டு இப்படி குழப்பிட்டியேடி! இனி யாருடி வருவா? கர்வக்காரி, திமிர் புடிச்சவள்ங்கிற பேர்தானடி மிஞ்சும் மூதேவி, அவன் ஆண்பிள்ளை, பலமாதிரியும் தான் இருப்பான். அதுகளையெல்லாம் பார்த்தால் நடக்குமா? நாம்தானடி அனுசரிச்சுப் போகவேணும்.'

அம்மா அந்தநாள் பெண்ணாகவே பேசுகிறாள்.

'இந்தப் பெண்மையின் பலவீனங்களில்தான் ஆண்மையின் பலம் வலிமைபெறுகிறது. அப்படி அனுசரிச்சுப் போகணும் என்கிற அவசியம் ஒன்றும் எனக்கில்லை. அதற்காக இங்கே பெண்மை ஏங்கிப்போய், கருகி-காய்ந்துவிடவில்லை,'

சொல்லத் துடித்த நாவை வெகு கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்ளுகிறேன். சொன்னால் அம்மாவுக்கு புரியாது.

அப்பா அவருக்கே உரிய நிதானத்துடன் கூடத்தில் அமர்கிறார்!

நான்!

எனக்கு நானே போட்டு விட்ட செஞ்சரியில் விக்கட் விழுந்ததையும் பொருட்படுத்தாமல் வீராங்கனையாக நிமிர்ந்து நிற்கிறேன்!

(யாவும் கற்பனை)

## நினைத்துப் பாரும்!

''எங்களுக்கும் கலை கலாச் சாரம் உண்டு
எப்படியும் நாம் அவற்றைப் பேணிக் காக்கும்
மங்கையராய் இவ்வுலகில் வாழவேண்டும்
மானத்தைப் பெரிதெனவே மதித்தல் வேண்டும்
அங்கங்கள் தெரியவுடை அணிதல் வேண்டாம்
ஆபாசமாய் நீவிர் அலைதல் வேண்டாம்
தங்கையரே கேண்மின்'' என்று உரைத்தால் ஏனோ
தவறாகப் புரிந்தெம்மை ஏசுகின்றீர்?

''நாற்குணமும் கொண்டவளே எமது நங்கை
நாடறியும் எங்கள் குலப் பண்பை என்று
சாற்றி வைத்துச் சென்றாரே எமது முன்னோர்
சற்றேனும் அவர் வார்த்தைக் கமைந்து, மற்றோர்
போற்றிடவும் புகழ்ந்திடவும் வாழவேண்டும்
பூவையரே'' என்றுரைத்தால் ஏனோ நீவிர்
சீற்றமது கொள்கின்றீர் சிந்தை நோகச்
சினந்தெம்மை ஏசுகின்றீர் ஏது செய்வோம்?

பாதியுடை உடுப்பதனாற்றான் உங்கள்
பருவத்தின் அழகதனைக் காட்டவேண்டும்?
வீதியிலே பிறர் நகைக்கும் வண்ணம் ஏனோ
விநோதவுடை அணிந்து வலம் வருதல்வேண்டும்?
கோதிமுடிக்காதுமது கூந்தல் தம்மைக்
குலையவிட்டு, நிலைகெட்டேன் திரிதல்வேண்டும்?
நீதி நெறி என்பதெல்லாம் பொய்யோ? பெண்மை
நிலையதனைச் சிறிதேனும் நினைத்துப் பாரும்!!

- கீழ்கரவை கி. குலசேகரன் -

## வரப்பெற்றோம்

நூல்: இந்து தர்மம் 1979

வெளியீடு: இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.

1979-ம் ஆண்டு வெளியீடான 'இந்து தருமம்' சஞ்சிகையில் சைவசித்தாந்தத் தோடும், ஆலயங்களோடும், சிறுதெய்வ வணக்கமுறைகளோடும் தொடர்புடைய வகையில் பதினொரு கட்டுரைகளும், மூன்று கவிதை ஆக்கங்களும், ஒரு புவியியற் கட்டுரையும் இடம்பெற்றுள்ளதோடு, அகால மரணமடைந்த பேராசிரியர் கோ. செல்வநாயகம் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர் சங்கம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து குறிஞ்சிக்குமரன் கோவில் கும்பாபிஷேகம் வரையிலான பணிகளை நினைவுகூரும் கட்டுரையொன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் ஆ. வேலுப்பிள்ளை, கா. இந்திரபாலா, சி. தில்லைநாதன், துரை. மனோகரன், செ. சிவலிங்கம், பொ. பாலசுந்தரம்பிள்ளை, க. ந. வேலன், கு. பராராஜசேகரம், திருமதி கலையரசி சின்னையா, செல்வி தவமணிதேவி சாம்பசிவம், செல்வி உமாசந்திரா முத்தையா, செல்வி விமலேஸ்வரி வல்லிபுரம், செல்வி சியாமளா சந்திரசேகரம் ஆகியோர் 'இந்து தருமத்திற்கு' விடயதானம் செய்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரறிஞர் சேர். பொன். அருணாசலம்

# அப்பழுக்கற்ற தேசாபிமானமும் சமூகப்பணிகளும்

### வரலாற்றுவாணர் வை. முத்துக்குமாரசுவாமி

சேர். பொன் அருணாசலம் அவர்கள் 1915-ம் ஆண்டில் இலங்கையின் அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தவேண்டும் என்று அயராத கிளர்ச்சி செய்தார். இலங்கையில் ஒரு தேசிய மக்கள் சபை ஒன்றை உருவாக்க முனைந்தார். அதுவே பின்னர் இலங்கைத் தேசிய காங்கிரஸ் சபையாகப் பரிணமித்தது. அவர் ஓர் அப்பழுக்கற்ற தேசாபிமானியாக விளங்கினார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவனாக இருக்கும் பொழுதே யுவபுருஷராகிய அருணாசலத்தின் நெஞ்சில் ஒரு தூய ஆசை ஏற்பட்டது. அது என்னவெனில் இந்தியாவிற்கு சுயாட்சியைப் பெறுவதற்கு உழைக்கும் தமது இந்திய நண்பர் ஆனந்தமோகன் போஸ் நிறுவிய இந்திய தேசிய காங்கிரஸ் சபையைப்போல, இலங்கையில் ஒரு தேசிய காங்கிரசை நிறுவி அது இலங்கையின் சுயாட்சியை அடையப் பணி ஆற்றும்படி செய்வதாகும். இத்தூய ஆசை அருணாசலத்தின் உள்ளத்தில் உதித்து, அல்லும் பகலும் முறுகி வளர்ந்தது. 1919-ம் ஆண்டு அன்னார் இலங்கைத் தேசிய காங்கிரசை நிறுவிய பொழுது இதனைப் பற்றித் தமது தலைமை உரையில் குறிப்பிட்டுள்ளார்.

### எங்கள் அரசியல் தேவைகள்

1917-ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 2-ந் திகதி கொழும்பு விக்டோரிய மெமோரியல் மண்டபத்திலே சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் 'எங்கள் அரசியல் தேவைகள்' என்னும் பொருள் பற்றிப் பேசிய பேருரை வரலாற்றுப் புகழ் உடையது. இதனை இலங்கைத் தேசிய வளர்ச்சியில் நாட்டமுள்ளோர் அரசியல் பகவத்கீதை அல்லது விவிலியநூலாகக் கொண்டனர்.

ஈண்டு சேர். பொன். அருணாசலம் அவர்கள் ஆற்றிய பேருரைகளில் சில அரிய முத்துக்களை நாம் வழங்குகின்றோம். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஈட்டிய பெருமைகளில் முக்கியம் வாய்ந்தது, அங்கு பயிலும் மாணவர் தமது சிந்தனைகளைச் சுதந்திரமாக எடுத்து உரைக்கும் வாய்ப்பை அளித்த சிறந்த பண்ணையாக விளங்கியது. இத்தாலியின் சுதந்திரத்திற்குப் போராடிய வீரர்களின் வரலாறு இளமையான மாணவரான அருணாசலத்தின் பசுமையான நெஞ்சில் இலங்கையில் ஒரு தேசிய மறுமலர்ச்சி தோன்றவேண்டும் என்னும் எண்ணம் உதித்தது.

(அ)

'நான் கிராமவாசிகளைப் பற்றியே முக்கியமான கரிசனை உடையேன். அவர்களே நமது நாட்டில் முக்கியமானவர்கள். நகரவாசிகள் நாட்டில் உள்ளவர்களைச் சுத்த முட்டாள்கள் எனக் கருதுகிறார்கள். அது மேல் நாடுகளைப் பொறுத்தவரை உண்மையாக இருக்கலாம். ஆனால் கிழக்கு நாட்டைச் சிறப்பாக நமது நாட்டைப் பொறுத்தவரையில் உண்மையல்ல. நமது நாட்டுக் கிராமவாசிகள் புத்திக் கூர்மையுடையவர்கள், பண்பாடு, கலாச்சாரம் உள்ளவர்கள். அவர்களைத் தாழ்வாகவோ, இழிவாகவோ கருதுவது தவறு. அவர்கள் நகரவாசிகளிலும் பார்க்க மேற்கூறிய அம்சங்களில் நனி சிறந்தவர்கள். நகரவாசிகள் நாலுதிசைகளில் இருந்துவந்து குடியேறிய பலவகைப்பட்டவர்கள். நமது கிராமங்களில் நூறாண்டுகளாகத் தன்னுணர்க்கத்தில் பயிற்சி உடையவர்கள். அவர்கள் இன்றைய பொதுவாழ்க்கை, பழமையில் வேரூன்றிய நாகரிகத்தில் ஊன்றியது.

(ஆ)

'உங்கள் நாகரிகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேம்பட்ட பழமைவாய்ந்தது. இன்று மேல் நாடுகளில் உள்ள சிறந்த தேசங்கள், அன்று காட்டுமிராண்டிகள் வசித்த அநாகரிக நாடுகளாக இருந்தன. அக்காலத்தில் நமது நாடு நாகரிகம் மிக்க நாடாக மிளிர்ந்தது நம்நாட்டில் சிறந்த கலைகள். இலக்கியம், நீர்ப்பாசன முறை, வாய்க்கால்கள் முதலியன இருந்தன. உங்கள் சமயசின்னங்களாக உள்ள கோவில்கள் எந்த நாட்டிலும் பார்க்கச் சிறப்பானவை. வலிமையான தரைப்படையும் கடற்படையும் இருந்தன. உயர்ந்த நாகரிகம் மிக்க நாடாக நமது நாடு இலங்கிற்று.'

(இ)

'இலங்கையைத் தாய் நாடாகக் கொண்ட நாம், நமது அரசாங்கம் இலங்கை மக்களின் அரசாங்கமாக இலங்க வேண்டும் என்று விழைகிறோம். மகாவம்சம் கூறுவது போல, நம்மை ஆட்சிசெய்பவர்கள் மக்களுடன் ஒன்றி ஒருவராக இருப்பார்களாக. இலங்கையர்களுக்காக ஆக்கபூர்வ பணிகளில் ஈடுபடுவார்களாக!'

(ஈ)

அரசாங்க பரிபாலனப் பணிகள் பலதிறப்பட்டன, அதிகமானவை; உத்தியோகத்தர்கள் கையில் எல்லாச் சக்தியும் அமைந்துள்ளது. அவர்கள் நேரம், உழைப்பு ஆகியவற்றைப் பூரணமாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே ஆற்றல்படைத்தவர்கள் தாமும் அன்றுடன்று பணிகளில் அக்கறை காட்டலாமொழிய சுற்றுடலில் என்ன நடக்கிறது என்று அவதானிக்கவோ, எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கவோ முடியாமல் இருக்கிறது. ஆகவே நம் நாட்டு மக்களின் உடல் நலம் சுகாதாரம் முதலிய முக்கிய பிரச்னைகளைத் தீர்க்க முடியாத இடர்பாடு ஏற்பட்டுள்ளது.

(உ)

இந்நாட்டு மக்களுக்குத் தன்னுதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படவில்லை. இந்தியாவிலிருந்து [illegible] அ[illegible]ல்தனை [illegible] பல [illegible]டிகள் கீழே உள் [illegible] 1833-ம் ஆண்டு நமக்கு கோல்புறூக் . கமெறன் ஆணையாளர் கோஷ்டி வழங்கிய தீர்ப்பு - அரசியல்நீதித்துறை என்னும் இரு துறைகளிலும் வெகு மோசம் செய்துள்ளது. ஐரோப்பிய நாகரிகத்துக்கு சிறந்த வளர்ப்புப்பண்ணையாக இலங்கையைக் கருதுவதாகத் தமது கருத்தை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அருணாசலம் அவர்கள் இலங்கை மக்களின் சமூகப் பணிகளை விஸ்தரிக்க ஆர்வம் கொண்டனர். கொழும்பிலே உள்ள பல கொட்டில்களிலும் குடிசைகளிலும் உள்ள கஷ்டங்களைப் பற்றியும், மற்றைய அம்மை, கசம், மலேரியா (மலைக் காய்ச்சல்) முதலிய வியாதிகளினால் இலங்கையிலே பல்லாயிரம் மக்கள் வருத்தம் அடைந்துவருதலையும் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட எல்லாத்தொழிலாளரின் நிலை, மிகவும் மோசமானது என்பதை ஆராய்ந்து ஆணித்தரமாக அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டினார்.

1915-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் திகதி, சேர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் உதவியுடன் இலங்கைச் சமூகப் பணிச்சபையைத் தொடக்கி வைத்தார். அப்பொதுக் [illegible]டத்தில் அருணாசலம் அவர்களே தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவர் ஆழ்ந்த கரிசனையுடன் தொகுத்த அச்சபையின் சட்டங்களும் உபசட்டங்களும் சபையினரால் உவந்தேற்கப்பட்டன. இதைக் கண்ட மகாத்மா காந்தியின் சற்குருநாதர் கோகலேதாமும் இச்சட்டங்களையே இந்திய சமூகப்பணிச் சபைக்கும் ஏற்றுக்கொண்டனர் ஆகில் இவை எத்துணை சிறந்தன என்பதைக் கூறவும்வேண்டுமா!

### இராப் பாடசாலை நிறுவுதல்

அருணாசலம் அவர்கள் தலைமையில் இலங்கைச் சமூகப் பணிச் சபையினர், மருதானை டீன்ஸ் வீதியில் ஓர் இராப் பாடசாலையை நிறுவினர். அச்சபை உறுப்பினர் அவ்வட்டாரத்தில் வாழும் எளிய தொழிலாளர் இல்லங்களில் வசிக்கும் கல்வி வாசனை இல்லாத வறியவர்களுக்கு கல்வி கற்பித்தனர். அத்துடன் கைத்தொழிற் பாடசாலை ஒன்று நிறுவி, குடிசைக் கைத்தொழில்களை வறியவர்களுக்குப் படிப்பித்தனர்.

தபால் சந்தோர் சேமிப்பு வங்கிகளைத் தொழிலாளர்கள் பயன்படுத்த அருணாசலம் ஆவன செய்தார்.

அருணாசலம் அவர்கள் ஊக்கத்தால், கைத்தொழில் கமத்தொழில் முயற்சிகளை மக்கள் அபிவிருத்தி செய்வதற்காகக் கூட்டுறவுக் கடன் அளிக்கும் சபைகள் நிறுவப்பட்டன. இந்தக் கைத்தொழிலாளர்கள் செய்யும் பொருட்களை விற்பனைசெய்வதற்கென கூட்டுறவு விற்பனை நிலையமும் ஆரம்பிக்க அருணாசலம் அவர்களே தூண்டினர்.

### ஏழை மக்கள் துயர்துடைத்தவர்

1895-ம் ஆண்டு கொழும்பில் உள்ள ஏழை மக்கள், நல்ல வீடு, நல்ல தண்ணீர் முதலிய வசதிகளின்றி சுகாதாரமில்லாத சேரிகளில் வசித்தனர். அவர்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் வசதியும், புதிய மாதிரி இல்லங்களையும் அரசாங்கம் அமைத்துக் கொடுத்ததற்கு மூல காரணமாயிருந்தவர் அருணாசலம் அவர்களேயாகும்.

### வெள்ள நிவாரணம்

1916-ம் ஆண்டு மே மாதம் இலங்கையில் கொழும்பில் வெள்ளம் வந்து ஆயிரக்கணக்கானோர் இருக்க வீடின்றி உணவின்றி, உடையின்றித் தவித்தனர். அப்பொழுது அருணாசலம் அவர்கள் சமூக சேவா சங்கத்திற்கு தலைவராக இருந்தவர். வெள்ள நிவாரண நிதி ஒன்றினை அவர் சங்க மூலம் தொடக்கி நிதி திரட்டி அல்லல்களை நீக்கினார். அக்காலத்தில் அரசாங்கப்பணியாளர்-தம் கடமையைச்செவ்வனே பார்க்காமல் இருப்பதைக் கண்டு அவற்றை மேலதிகாரிகளுக்கு அம்பலப்படுத்தினார். அவர் கிராம பரிபாலனத்தில் சாதாரண மக்களும் பங்குபற்ற வழிசெய்தார்.

(வளரும்)

# இலங்கையில் மத்திய வகுப்பின் தோற்றமும் வளர்ச்சியும்

### தி. வெற்றிவேலுப்பிள்ளை பி. ஏ. (சிறப்பு)

இலங்கையிலுள்ள நடுத்தர வகுப்பினர் 19-ம் நூற்றுண்டின் இரண்டாம்காற்கூற்றின் தொடக்கத்திலே தோன்றிய இரு சமூக பொருளாதார காரணிகளாலே உருவாகினர். அக்காரணிகளாவன: (1) ஆங்கிலப் பாடசாலைகள். (2) அரசாங்க உத்தியோகங்கள். இவை இரண்டும் அந்நூற்றுண்டிலே ஒன்றையொன்று வளப்படுத்தின.

வரலாற்றுமுறையாகக் கூறுகையில் இக்காரணிகள் 1853-ம் ஆண்டின் கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்கள் எனப் பொதுவாகக் கூறப்படுபவற்றின்நேர்விளைவுகளேயாகும். சுதேசிகளுள் உயர்வகுப்பினர் நம்பிக்கைக்குரிய பதவிகளை வகிப்பதற்கு ஒழுக்கத்தாலும், நுண்ணறிவாலும் அவர்களைத் தகுதியுடையவர்களாக்கிச் சீர்திருத்தலே சிறந்த வழியெனக் கமறன் நம்பினார். அரசாங்க சேவையின் வெவ்வேறு கிளைகளுக்கும் சுதேச இளைஞர் தம்மைத் தகுதியுடையவராக்கிக்கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு வழி வகுத்துக் கொடுக்கும் நோக்கத்துடன் சுயமொழிப் பாடசாலைகளுக்குப் பதிலாக ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவியமையும் இலங்கையில் ஆங்கிலக் கல்வி என்ற பயிர்ச்செய்கையில் முதன்முதல் முளை கொண்ட வித்தாகும்.

[illegible] ஆங்கிலக் கல்வியின் மூலம் இலங்கையில் ஒரு வகுப்பை உருவாக்க முயன்றனர். அவ்வாறு உருவாகிய வகுப்பே இன்று மத்திய வகுப்பு என்று இலங்கையில் அழைக்கப்படுகிறது.

### உயர்தர மத்திய வகுப்பினர்

கோல்புறூக் கமறன் என்பவர்களது கல்விச் சீர்திருத்தத்தின் பயனாக மேனாட்டு மயமான உயர்தர மத்திய வகுப்பினர் இலங்கையில் படிப்படியாகத் தோற்றம் பெறலாயினர். இவர்கள் நான்கு தலைமுறைகளாகத் தேடிய செல்வத்தால் மட்டுமன்றி அரசாங்க உத்தியோகங்களாலும், வர்த்தகத்தினாலும் பொருளாதார சமூக நிலையிலே தலைமைபெற்று விளங்கினர். சமூகத்தில் செல்வாக்குடைய எந்த ஒரு நிலைக்கு வருவதற்கும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கில அறிவு அவசியமாயிற்று. இவ் அறிவை கட்டணம் அறவிடும் பாடசாலைகளில் சில ஆண்டுகள் படிப்பதால் மட்டுமே பெறக்கூடியதாயிருந்தது.

இலங்கையில் தோன்றிய மத்திய வகுப்புப் பிரிவு மேற்கு நாடுகளிலுள்ள எந்த ஒரு வகுப்புப் பிரிவைக் காட்டிலும் கட்டுறுதிமிக்கதாயிருந்தது. 19-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியளவில் தோன்றிய இவ்வகுப்பினர் அந்நூற்றுண்டின் இறுதியளவில் முதன்மை பெற்றதோடு, தம் கருமத்தை எடுத்துரைக்கும் தகுதியும் உடையவராய் விளங்கினர்.

19-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் முன்னணிக்கு வந்த மேலைநாட்டுக்கல்வி பெற்ற உயர்தர மத்திய வகுப்பினர் இலங்கை முழுவதும் உயர்தரக்கல்வி விரிவாக்கப்படவேண்டுமென்று கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இக்கிளர்ச்சிக்கு தனிப்பட்ட மிஷனரிமாரும் ஆதரவு கொடுத்தனர். இலங்கையில் வாழ்ந்த உயர்ந்தோர்குழாம் நடத்திய இக்கிளர்ச்சி குடியேற்ற நாட்டு அதிகாரிகளிடமிருந்து காலம் தாழ்த்திய ஆனல் சாதகமான பதிலை வெளிவரச் செய்தது.

இவ்வாறு இலங்கையில் தோற்றம் பெற்ற மத்திய வகுப்பானது இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் விரைவாக ஒருமுக்கிய இடத்தைப் பெற ஆரம்பித்தது.

### மத்திய வகுப்பின் இரு பிரிவுகள்

இத்தகைய மத்திய வகுப்பினரை இரு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன.

1. உயர்தர மத்திய வகுப்பினர். (Upper Middle Class)
2. கீழ்த்தர மத்திய வகுப்பினர் (Lower Middle Class)

உயர்தர மத்திய வகுப்பினருள் வைத்தியர்கள், வழக்கறிஞர்கள், பொறியியலாளர்கள்,

(7-ம் பக்கம்பார்க்க)

## வரப்பெற்றோம்.. ...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆக்கங்கள் ஆராய்ச்சிப் பெறுமானமுடையனவாயன [illegible]ன.

பேராதனையில் உயர்கல்வி பயிலும் மாணவர்களது ஆன்மீகத்தேவையினை நிறைவுசெய்வதாகவும், தாம் வாழும் சூழிடத்திற்கேற்ப பிரசாரத் தேவையை மனங்கொண்டும் உருவாக்கப்பட்டுள்ள 'இந்து தருமம்' பொதுவாகச் சைவாபிமானிகளனைவராலும் படிக்கப்படவேண்டியதும், பாதுகாக்கப்படவேண்டியதுமான ஒரு நூலாகும்.

- [illegible]. நாகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல் வைத்தியம்

பல்வைத்திய கலாநிதி **பா. சோ. பாரதி**

(3)

பற்சூத்தை என்பது பற்களின் இழையத்தில் (Calvified tissue) உண்டாகும் ஒருவகை நோய். எல்லோருடைய வாயிலும் எண்ணிறைந்த நுண்கிருமிகள் (Bacteria) வாழ்கின்றன பொதுவகையில் ஒருவர் உண்ணும் உணவுப் பொருட்களின் எச்சங்கள் அவர் வாயிலே சில மணி நேரம் தேங்கிநிற்குமாயின் இக்கிருமிகள் பல கோடியளவிற் பெருகும். இலற்றோ பசியசு (Lactobacillus) என்ற இனமே இக்கிருமிகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. இந்த இலற்றோ பசியசு என்ற கிருமிகள் காணப்படுகிறது. இந்த இலற்றோ பசியசு என்ற கிருமிகள் இலற்றிக்கமிலத்தை (Lactic acid) மிகுதியாகத் தோற்றுவிக்கிறது. பற்களிடையேயுள்ள ஈறுகளிலும் (Inter dental Saces) பற்களின் மேற்பக்கத்திலும் இயற்கையாக அமைந்திருக்கும். பிளவுகள் (Pits & fissures) முதலாம் இடங்களிலும் தேங்கி நிற்கும் உணவெச்சங்கள் இக்கிருமிகளின் பெருக்கத்தைக் கூட்டுகின்றன. இதனால் அமிலத்தன்மை (Acidity) வாயில் கூடுகின்றது. பல்லிலுள்ள சுண்ண இழையத்தை இந்த அமிலம் சிறிது சிறிதாகக் கரைக்கத் தொடங்கும். இதுவே பற்சூத்தையின் தொடக்கமாகும்.

சிறிய சிறிய குழாய்களாகத் தொடங்கிய சூத்தை நாளடைவிற் பெருக்கின்றது. இக்குழிகளைச் சூழ்ந்த பாகங்கள் உடைந்தும் கரைபட்டும் குழிகள் பெரிதடைகின்றன. முதலிற் பல்லின் மேற்பாகமாகிய மிளிரியைத் (Enamel) தாக்கத் தொடங்கிய பற்சூத்தை பல்லின் அடுத்த பகுதியாகிய பன்முதலை (Dentine) வந்தடைகிறது. இதுவரை ஒருவித நோதியேனும் கூச்சமேனும் உண்டாவதில்லை. பன்முதலைத் தாக்கத் தொடங்கிய பின்பு பல்லில் ஒருவகைக் கூச்சமும் நோதிப்பும் இடையிடையே தோன்றக்கூடும். பலருக்கு அது பல்லின் நடுப்பாகமாகிய மச்சைக்குழியைத் (Pulp Cavity) (பற்குழி) தாக்கும் போது கூச்சமும் வேதனையும் மிகுவதுண்டு. இனிப்பு உணவுகளை உண்ணும் பொழுதும் குளிர் பானங்களைப் பருகும்போதும் கூச்சந் தோன்றும், சிலருக்கு ஒருவித அறிகுறியும் தோன்றாமலே பல்லை முற்றாகத் தாக்கிப் பிடுங்கவேண்டிய நிலைக்குக் கொண்டு செல்லும். இந்தக் காரணத்தாலே சிலர் இந்த முறையைப்பற்றி கவனமெடுக்காது இருந்துவிட நேருகிறது.

## பல் சூத்தை தாக்கும் பல்லின் பகுதிகள்

பற்சூத்தை பல்லின் எப்பகுதியில் எவ்வளவு காலத்தில் உண்டாகுமென்பது இன்னமும் திட்டமாகக் கண்டறியப் படவில்லை. அது பல்லின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே தன்மையாகத் தோன்றுவதில்லை. பல்லின் மேற்பாகத்தில் எங்கெங்கே உணவெச்சங்கள் தங்கி கிருமிகளின் தாக்கத்தினால் அமிலத்தைத் தோன்றச் செய்கின்றதோ அங்கங்கே தான் சூத்தை முதலில் உண்டாகின்றதென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உணவை அரைக்கும் கடைவாய்ப் பற்களிலே (Molars & Pre Molars)தான் சூத்தை பெரும்பாலும் உண்டாகின்றது. இப்பற்களின் சில பாகங்கள் சூத்தையுண்டாதற்குச் சாதகமாகவும் பாதிப்புத் தன்மையுடையனவாகவும் இருக்கின்றன. கடைவாய்ப் பற்களின் மேற்பரப்பில் இயற்கையாய் அமைந்த துரவுகளிலும், பிளவுகளிலும் சூத்தை அதிகமாகத் தொடங்குகின்றது

பற்களிடையேயுள்ள ஈறுகளில் (Interdental Spaces) உணவெச்சங்கள் தேங்கி நிற்பதால் சூத்தை உண்டாவது இன்னொருவகை. இச்சூத்தையை நோயாளர் எளிதிற் கண்டுகொள்ள முடியாது. பெரும்பாலும் பற்கொதி தொடங்கிய பின்பே அவர்கள் இதை உணர்ந்துகொள்வர்.

முரசுகரைதலினால் வெளிப்படும்காரையிலும் (Cementum) பற்றேய்வு (attrition) பற்கரைவு (Erosion) காரணமாக வெளிப்படும் பன்முதலிலும் (Dentiue) சூத்தை தொடங்கலாம்.

## பற்சூத்தை தோன்றும் விதம்

சூத்தைஅரிப்புத்தன்மை பல்லின வெளித்தோற்ற அமைப்பிலே தங்கி உள்ளதோ அல்லது பல்லின் வெவ்வேறு பகுதிகள் பற்சூத்தைத் தாக்கத்திற்குக் காட்டும் எதிர்ப்பாற்றற்றன்மை குறைவாலாகியதோ என்று வரையறைவாகக் கண்டறியப்படவில்லை. முன்பு கூறியவண்ணம் ஒருவர் வாயிலே கணந்தோறும் பெருகும் கிருமிகள் ஒருவகைநுரைப் புளியத்தைப் (Enzmes) பிறப்பிக்கின்றன. இது வாயிலே தேங்கிநிற்கும் மாச்சத்துப் பொருள்களைத் தாக்கும் பொழுது இலக்கிரிக்கமிலம் (Lactic acid) உண்டாகின்றது. எவ்வகைத் தனித்த நுண்கிருமியினமாயினும் பல நுண்கிருமிக் கலப்பாயினும் பற்களின் மிளிரியைக் கரைப்பதற்கும் போதுமான அமிலத்தை அவற்றின் மேற்பரப்பிலே தோயும்படி செய்ய நேர்ந்தால் அது பற்சூத்தையைப் பிறப்பிக்கும். எவ்வளவு நேரம் பற்களுடன் அமிலம் சேர்ந்திருப்பது என்பதுதான் இதில் முக்கியமானது.

மேற்சொன்ன கிருமிகள் அமிலத்தன்மையை உண்டு பண்ணுவதில் முதன்மையானவை. வேறு கிருமிகளும் இதற்கு ஏதுவாக இருக்கின்றன. அறிவியலாய்வின்படி ஒரு பல்லின் சுண்ண இழையத்தைக் கரைப்பதற்கு வேண்டப்படும் அமிலத்தன்மையின் குறைந்த அளவு PH 5.0 ஆகும். ஆனால் அந்த இழையத்தைக் கரைக்க எவ்வளவு நேரம் வேண்டப்படுமென்பது இன்னமும் அறியப்படவில்லை, சூத்தையரிப்புத்தன்மைக்கு ஏதுவாகவிருக்கும் இக்கிருமிகளைப் பெருக்கமடையச்செய்வதற்கும் வாயை அசுத்தமடையச் செய்வதற்கும், வேறு நோய்களைத் தோற்றுவிப்பதற்கும் முக்கிய காரணங்களாக இருப்பவை பின்வருமாறு;-

## பல்லில் ஏற்படும் படிவங்கள்

(Dental Plaque)

உணவை உட்கொண்ட பின்பு பற்களை நன்றாகச் சுத்தம் செய்யாது விடுவதால் உணவெச்சங்கள் உமிழ்நீருடன் சேர்ந்து பற்களின் மேற்பரப்பிலே படிவமாகச் சேர்கிறது. உடனுக்குடன் சுத்தப்படுத்தாவிட்டால் சிறிது சிறிதாகப் படிவம் தடிப்படைகிறது. இயற்கையாக நீக்கம் செய்யப்பட்ட சவ்வணுக்களும் (Desquamated Cells) கிருமிகளும் (Living & dead Bacteria) இப்படிவத்துடன் சேர்ந்து கொள்கின்றன. உமிழ்நீரின் தன்மையும் இப்படிவச் சேர்க்கையைக் கூட்டவோ குறைக்கவோ ஏதுவாக இருக்கிறது.

இப்படியான படிவங்களிற் பெருகியிருக்கும் கிருமிகள் வெளிப்படுத்தும் புளிநுரையம் வாயிலே தேக்கமடையும். உணவுகளில் கூடுதலாக இனிப்புச் சத்துக்களைத் தாக்கத் தொடங்கும். இதனால் அமிலம் உண்டாகிறது.

## பல்லின் வெளித் தோற்றமும் அமைப்பும்

பற்களின்மேற் பரப்பிலுள்ள துரவுகளும் பிளவுகளும் (Pils & Fissures) உணவுத்தேக்கத்தைக் கூட்டிப் படிவங்கள் உண்டாவதையும் சூத்தை உண்டாவதையும் கெதிப்படுத்துகிறது. பற்களிடையே இருக்கும் வெளிகளும் (Interdental Spaces) ஒழுங்கு நிரையற்ற பற்களும் இப்படிப்படிவங்கள் தோன்றுவதற்கு ஏதுவாக இருக்கின்றது.

செயற்கைப்பற்கள்-சில பற்களைக்கொண்ட பதிலீடுகள்-(Partial dentures)

செயற்கைப்பற்கள் பாவிப்பவர்கள்அவற்றைத்துப்புரவாக வைத்துப் பாவிக்காது அழுக்கடைய விடுதல் வாய் துப்புரவின்மையை ஏற்படுத்தி வேறு வருத்தங்களைக் கொண்டுவர ஏதுவாக இருக்கின்றது, முறையாகச் செய்யப்படாத செயற்கைப்பற்களும் கெடுதல் விளைவிக்கின்றன.


தூய்மையாகவும் அழுத்தமாகவும் செய்யப்படாத பல் அடைப்புகளினாலும் (Faulty Dental Fillings) பற்களினால் இப்படியான படிவங்கள் தோன்றும். இனி மேலே கூறிய காரணங்கள் ஏதாவது இருக்கும் [illegible] பின் விளைவுகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

(தொடரும்)

# யாழ்ப்பாணத்தில் கொச்சிக்கணேசையர் பரம்பரை

**(ஓய்வு பெற்ற கல்லூரி முதல்வர் திரு. ச. அம்பிகை பாகன் எழுதி வெளியிட்டுள்ள யாழ்ப்பாணத்தில் கொச்சிக்கணேசையர் பரம்பரை என்ற நூலின் முகவுரை இங்கு கட்டுரையாகத் தரப்படுகின்றது)**

**1969-ம்** ஆண்டில் நாவலர் அவர்களுக்கு சிலை நாட்டுவது சம்பந்தமாக எடுக்கப்பட்ட விழாவின் ஓர் அம்சமாக ஒரு புத்தகக் காட்சி நடைபெற்றது. அக்காட்சி மூலம் மறைவாக இருந்த பல நூல்கள் வெளிவந்தன. அவற்றுள் ''திருவூடல்'', ''சுப்பிரமணிய பிரபாவம்'' என்னும் இரு நூல்களும் அடங்கும். இவற்றை மறுபிரசுரம் செய்விக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவற்றை எழுதியவர்கள் கொச்சிக்கணேசையர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என அறிந்தேன். இவ்விரு நூல்களுக்கு எழுதப்பட்ட முகவுரைகளைக்கொண்டு இப்பரம்பரையினரைப் பற்றி ஒரு சில குறிப்புகளை அறிந்துகோண்டேன். மேலும் ஆராய்ந்ததில் இவைகளைப் பற்றிய சில முக்கியமான விஷயங்களைப் பெற்றுக் கொண்டேன். இவற்றைக் கொண்டு ''யாழ்ப்பாணத்தில் கொச்சிக்கணேசையர் பரம்பரை'' என்னும் தலைப்பில் மூன்று கட்டுரைகளை எழுதி 1972-ம் ஆண்டின் இறுதியில் தினகரன் வாரமஞ்சரியில் வெளியிட்டேன். இக் கட்டுரைகள் விசேடமாக கணேசையர் மகன் அனந்த சுப்பையரைப் பற்றிய கட்டுரை. சில அன்பர்களின் கவனத்துக்குள்ளாயின. அனந்தசுப்பையர் வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலைக் கட்டிய வைத்தியலிங்கம் செட்டியார் காலத்தவர். இவர் சிவன் கோவிலைப் பற்றிப் பாடிய பிரபந்தங்களில் வைத்தியலிங்கம்செட்டியாரின் சிறந்த குணாதிசயங்களையும்அவரின் வள்ளல் தன்மையையும் விதந்து பாடியுள்ளார். இவற்றைப்படித்த வட்டுக்கோட்டை மக்கள் கவிமணி மூ. இராமலிங்கம் போன்றசிலர்வைத்திய



ச. அம்பிகைபாகன்

லிங்கம் செட்டியாரைப் பற்றி அனந்தசுப்பையர் காட்டிய சிறப்புகளுக்கு மாறான சில கருத்துக்களைத் தெரிவித்தனர். ஆனால் அப்பொழுது எனது நோக்கம் கொச்சிக்கணேசையர் பரம்பரையைப் பற்றி ஆராய்வதாக இருந்தபடியால் வைத்தியலிங்கம் செட்டியார் பற்றிய சர்ச்சையில் ஈடுபட விரும்பவில்லை. பின்னர் இந்திய வானொலியில் வெளிவந்த சீட்டுக்கவிகள் பற்றிய கட்டுரையில் வைத்தியலிங்கம் செட்டியாருக்கு எழுதப்பட்ட ஒரு சீட்டுக்கவியும் எடுத்தாளப்பட்டிருந்தது. இந்தச் சீட்டுக்கவியை எழுதியவர் பாண்டிநாட்டைச் சேர்ந்த சரவணப் பெருமாட் கவிராயர் ஆவர். இந்தக் கவியிலிருந்து செட்டியார் உலகறிந்த ஒரு வள்ளலாக இருந்தார் என்பது புலப்படுகிறது. அக்கவி பின்வருமாறு:

இந்த்ரதரு யாழ்ப்பாண
மேவிய வயித்ய லிங்
கேந்த்ர னெதிர்
கொண்டு காண்க
வயமான கையிலே
மூக்குள்ள தொன்று திரு
மாயன் பிறப்பி லொன்று
வாற்புறமோர் கொம்பு
மாம்
தலைப்புற மோர் கொம்பு
மாம்
வாகனந் தன்னி லொன்று
வாரமது தன்னி லொன்று
வரமுடன் வெளுத்த
சந்திர னென்று நீயின்ன
வரிசை தந்தருள்
புரிவையே

மேற்காட்டப்பட்ட கவியின் மூலம் கவிராயர் செட்டியாரை தமக்கு யானை, குதிரை, சிவிகை, பொன், வெள்ளி, பட்டு முதலியவற்றை வரிசையாகத் தரும்படி கேட்டுள்ளார்.

வைத்தியலிங்கம்செட்டியார் 1795-ம் ஆண்டில் சிவன் கோவிலைக் கட்டி முடித்துக் கும்பாபிஷேகம் செய்வித்தார். பின்னர் 1805-ம் ஆண்டில் ஒரு மரணசாதனத்தைப் பிறப்பித்துவிட்டு காசியாத்திரை சென்றவர் அங்கே மரணமடைந்துவிட்டாரென அவரைப்பற்றிக் குறிப்பிடும் நூல்களெல்லாம் கூறுகின்றன. இவற்றை ஒட்டியேயானும் எழுதியிருந்தேன். இக்கருத்தைக் கவிமணி ஏற்காதபடியாலும் செட்டியார் காலத்தை செவ்வனே நிர்ணயிப்பதில் ஆர்வம் இருந்தபடியாலும் இவ்விஷயம் பற்றிய பல கடிதங்கள் எனக்கு எழுதினார். 26-12-72ல் எழுதிய கடிதத்தில் செட்டியார் காலத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். 13-1-1848 இலும் செட்டியார் உயிருடன் இருந்தாரென 'உதயதாரகை' அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறது. ஆகவே அவர்காலம் 18-ம் நூற்றுண்டின் கடைக்கூறும், 19-ம் நூற்றுண்டின் முற்கூறும் எனலாம்.

வைத்தியலிங்கஞ்செட்டியார் காலத்தை ஆதாரபூர்வமாக நிரூபித்துவிட்டால் அவருடன் தொடர்புள்ள புலவர் பெருமக்கள் காலங்களைக் கணித்துவிடலாம்.

வைத்தியலிங்கம் செட்டியாரைப் பற்றிய மேற்படி விஷயங்களை எடுத்துக் காட்டியதன் நோக்கம் அவரைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி நடைபெறவேண்டிய அவசியத்தைக் காட்டுவதற்கே.

கொச்சிக்கணேசையர் பற்றிப் பத்திரிகையில் எழுதியதோடு திருப்தியடையாமல் மேலும் அவரைப்பற்றி அறிய விரும்பி அவர் வாழ்ந்த காலத்தைப் பற்றி, டச்சுக்காலம் பற்றி, ஆராய்ச்சி செய்த பேராசிரியர்கள் காள் குணவர்த்தன, அரசரத்தினம், தனஞ்செயராசசிங்கம் முதலியவர்களோடு தொடர்பு கொண்டேன். ஆனால் அவர்களால் இவரைப்பற்றி விசேடமாக ஒன்றும் கூறமுடியவில்லை. சமயத்துறையிலும், இலக்கியத்துறையிலும் கொச்சிக்கணேசையர் காலம் ஒரு முக்கிய காலமாக இருப்பதால் இவ்விஷயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

கொச்சிக்கணேசையர் பரம்பரையைப்பற்றி எழுதிய காலத்திலேயே ஆறுமுகத் தம்பிரான் பற்றிய கட்டுரையையும் எழுதினேன். இதற்குக் காரணம் நாவலர் மகாநாட்டு விழா மலரில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரையாகும். அக்கட்டுரையில்ஸ்ரீ பரிபூரானந்தா என்பவர்நாவலரின்மாணவரும் பெரியபுராணத்துக்கு சிறந்த உரை கண்டவருமான ஆறுமுகத்தம்பிரான் தமது வாழ்க்கையின் பிற்பகுதியில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார் என எழுதியிருந்தார். இவர் மாத்திரமல்லாமல் மயிலை சீனி வெங்கடசாமியும் இதே கருத்துப்பட தமது ''பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம்'' என்னும் நூலில் எழுதியிருப்பதைக் கண்டேன். இவ்விஷயத்தை ஆராய்ந்தபொழுது இவர்களுள் கூற்றுத்தவறான தென்பதை இலகுவில் நிரூபிக்கக்கூடியதாக இருந்தது. இவர்களுக்கு இவ்விஷயத்தில் மயக்கம் ஏற்பட்டதற்குக் காரணம் ஆறுமுகத்தம்பிரான் என்னும்பெயரில்இருவர் இருந்ததே. நாவலர் மாணக்கரான ஆறுமுகத்தம்பிரான் சூரியனார் கோவில் ஆதீனத்தைச் சேர்ந்தவர். மற்றைய ஆறுமுகத்தம்பிரான் தருமபுர

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "இசையில் புதிய வடிவங்களைப் படைத்தலில் இன்றுள்ள சிக்கல்கள்"

## இந்தியாவில் இசையும் பண்பாட்டுமாற்றமும்

ஆங்கில மூலம்: கலாநிதி நாராயண மேனன்
தமிழாக்கம்: வி. சிவசாமி எம். ஏ.

(சென்றவாரத் தொடர்ச்சி)

இசையின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு முற்றுப்புள்ளி வைத்தலையும் குறிப்பிட்ட கால இசை நிலையினை எக்காலத்திற்குமுரிய ஒழுங்காகக்கொள்ளுதலும் இசையினைப் பேணிப் பாதுகாத்தல் எனக் கொள்ளமுடியாது. பேணிப் பாதுகாத்தலை முடிவான நோக்கமாகப் பார்க்கமுடியாது. ஆனால் நல்ல வளர்ச்சிக்கும் புதிய அபிவிருத்திக்குமுரிய ஒரு முக்கியமான தேவையாகவே இது அமையும். இத்தகைய வளர்ச்சியிலே கற்றல், பகுத்து ஆய்தல் முழுமையான விளக்கம் ஆகியன இடம் பெறும். பேணிப்பாதுகாத்தல் மூலம் வளர்ச்சி தொடர்ந்து ஏற்படுதல் நிச்சயமாகும். முக்கியமான இணைப்புகளைத் தொடர்ந்து நிலவச்செய்யலாம் வருங்காலச் சாதனைகளுக்குவிசைகொடுக்கும் பலகையாக அமையும்.

இவ்வாறு இந்தியமரபு வழியிலான பெருந்தொகையான இசைவடிவங்களைப் பேணிப் பாதுகாத்தலும், கடந்தகால இசைமரபுகளிலிருந்துபுதியவடிவங்களைசமகால வாழ்க்கையோடு ஒட்டியபுதிய வடிவங்களைப் படைத்தலும் இந்திய இசையில் இன்றுள்ள பிரச்னையாகும் இதில் ஒரு முரண்பாடு இல்லை.

எமது இசைபற்றிய பொதுவான தவறான கருத்துக்களில் ஒன்று (நன்கு கற்ற இசை அறிஞர் கூடி அடிக்கடி கூறுவர்) யாதெனில் இசைமரபுகளின் அடிப்படை அம்சங்கள் மாற்றமடையவில்லையென்பதே. இம்மரபு தொடர்ச்சியாக நிலவி வந்துள்ளது; தேங்கவில்லை. ஆனால் நூற்றாண்டுகளாக நன்கு வளர்ந்துள்ளது. எமது இசைமரபிற்கு அடிக்கடி பயன்படுத்தப்படும் 'பரிவர்த்தன சீல' எனும் பதம் குறிப்பிடற்பாலது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளிலே தான் இது மிகவும் பொருத்தமானதாகும். எமது கலாச்சாரப் பாரம்பரியம்பற்றிய கூடுதலான உணர்வும், பெருமிதமும் ஏற்பட வழிகோலிய அரசியல் சுதந்திரம் ஏற்படுதலுடன் இது தொடர்புள்ளதாகும்.

### மாற்றத்தின் அறிகுறிகள்

கடந்தஇருபத்தைந்துஆண்டுகளிலே நடைபெற்றவை வியக்கத்தக்கன. சுதந்திரத்துடன் இந்திய சமஸ்தானங்களின் ஆதரவு திடீரென மறைந்தது. அறையிலிருந்து கச்சேரி அரங்கிற்கு இசை பெரிய பாய்ச்சலை மேற்கொண்டுள்ளது. நெடுங்காலமாகப் போற்றப்பட்டுவந்த இசைபற்றிய காலக்கோட்பாடுபற்றிய மரபுகள் ஒழிந்துபோகின்றன. உண்மையில், தென்னிந்தியா போன்ற சில பகுதிகளில்இவை முற்றாக மறைந்துவிட்டன. இரவு முழுவதும் நடைபெறும் கச்சேரிப் பொழுதுபோக்கு, பல மணித்தியாலங்களுக்குச் சிறிது சிறிதாகப் பயன்படுத்தப்படும் ராகங்கள் ஆகியனவற்றிற்குப் பதிலாகப் புதிய கட்டுப்பாடு, ஒழுங்கு, சொற்சுருக்கம் முதலியன இடம்பெறுகின்றன. இது காலம்வரை உள்நோக்காக-உள்ளார்ந்ததாக ஒருவகைஉள்நோக்குப்படைப்பாக இருந்து வந்தஇசைபல்வேறுவகையான நிகழ்ச்சிகளுக்கும் நிலைமைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. எல்லாவகையான செயற்பாடுகளுக்கு ஒரு துணைக் கருவியாக இசை அமைந்துவருகின்றது. திரைப் படத்திலே இசை இடையிடையேதேவைப்படுகின்றது. எமது நடனத்திற்கு, ஒரு புதிய விரைவியக்கத்துடன் சேர்ந்த இசை தேவைப்படுகின்றது. படை அணிவகுத்துச் செல்வதற்கு இசைதேவை. பாடசாலைச்சிறுவர்களுக்குச் சமுதாயப் பாட்டுக் கலைக்குரிய பாடல்கள் தேவை. ஐந்தாண்டுத்திட்டங்களைப் பரப்புதற்குப் பாடல்களையும், நடனங்களையும் பயன்படுத்துகின்றனர். இவை யாவும் வெளிப்புறமாக்குதல், பரீக்ஷார்த்தமாதல் வகையில் அமைந்துள்ளன. இளம் வாலிபர் தவிக்கமுடியாதபடி விரைவாக்குதல்போல, இவை சில வேளைகளிலே சீரற்றும் பெரும் விளைவுகளுடன் அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டாகத் திரைப் படத்தினை (சினிமாவை)எடுத்துக்கொள்ளலாம்.ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளிலே இந்தியாவிலே திரைப்பட மூலம் ஒரு புதியவகை இசை தோன்றியுள்ளது. இதுவே கிழக்கும் மேற்கும் சந்திக்கின்றன, ஆனால் இதிலே கிழக்கிலுள்ள சிறந்த கலையோ மேற்கிலுள்ள சிறந்தகலையோ இங்கு சந்திக்கவில்லை. திரைப்பட இசையின் பெரும்பகுதி வெட்டப்படாதவகையில் வியாபார நோக்கிலும் உணர்ச்சியினை வெளிப்படுத்தும் பாங்கிலும் அமைந்துள்ளது. ஆனால் ஒரு புதிய ஆய்வு நோக்கினைப் பிரதிபலிக்கின்றது. அன்றும் இன்றும் இவ் ஆய்வு நோக்கினாலே சரியான விளைவும் ஏற்படும். எடுத்துக்காட்டாக, பதர்பஞ்சலி அல்லது கபுலிவல இசையினைக் குறிப்பிடலாம். ஆனால் குழுவிலே பங்குபெறும் கட்டுப்பாடுள்ள இசை வித்துவானை உருவாக்கியமை ஒருவேளை திரைப்படங்களின் உண்மையான சாதனையாகும். இத்தகைய குழு இசை இந்திய இசை உலகிலே புதியதோன்றாகும்.

இவ்வகையில் அகில இந்திய வானொலி நிலையம் சில முக்கியமான குறிப்பிடத்தக்க ஆரம்பவேலை செய்துள்ளது. [illegible] வாத்தியபிருந்தம் வடநாட்டுத் தென்னாட்டு இசைப்பாணிகளிலே சமமாகக் கைதேர்ந்த நன்கு பயிற்சிபெற்ற இசை வித்துவான்களைக்கொண்டுள்ளது. இது இவ்விரு பாணிகளுக்குமுரியகட்டுப்பாடு [illegible] சமத்துவமும் உள்ள வாத்திய இசைத் தொகுப்பினைக்கொண்டதாகும், இந்திய சாஸ்திரீய இசையினை வாத்தியமூலம் அதன் உண்மையான இயல்பும் சிறப்பான நுணுக்கங்களும் இழக்காமல் இசைக்ககூடிய எவ்வளவிலான இந்திய இசைத் தொகுப்பு இது. (வாத்திய பிருந்தம்) மட்டுமேயாகும். வாத்திய பிருந்தம் இன்னும் பரீக்ஷார்த்த நிலையிலே [illegible] உள்ளது. இருபது ஆண்டுகளில் வாத்திய இசைத் தொகுப்பு மரபு ஒன்றினை உரு[illegible] லது மனக் கசப்பினையோ ஏற்படுத்தாத வகையில் ஒரு வாத்திய இசைக்குழு உருவாக்கும் முதல் தடவையான நல்ல முயற்சி எனலாம். இதனால் இதுவரை அறியப்படாத அல்லது முற்றாக ஆராயப்படாத இந்திய இசைபற்றிய கருத்துக்களும், புலனுணர்ச்சிகளும் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இதிலும் இசையின் பிற விடயங்களிலும் ஒலிபரப்புதலே எம் நாட்டிலுள்ள இசைக்கல்வி பற்றிய மிகப்பெரிய சாதனமாகும். சிறந்த இசை இதுவரை கேட்கப்படாத கோடிக்கணக்கான இல்லங்களிற்கும் எமது மிகச் சிறந்த இசையினை இது (வானொலி) கொண்டு செல்லுகின்றது. அலுவலகத்தின் கட்டுப்பாடின்றியும் அச்சம் விருப்பமின்றியும் நல்ல இசை ஒலிபரப்பப்படுகின்றது. இதனால் ரசிகத்தன்மையின் தரம் உயர்ந்துள்ளது. கேட்போரின் இசை நுணுக்க அறிவும் பரந்த ரசிகத்தன்மையும் வளர்ந்துள்ளன. இதன்மூலம் புதிய வடிவங்களும் பரீஷிக்கப் பட்டுள்ளன. வழக்கிலற்ற இவ் வடிவங்கள் புத்துயிர்பெற்றுள்ளன. இது இரு பெரிய பொறுப்பு. எல்லாம் நன்கு நடந்தபின் இதற்கு வெற்றியும் முனைப்பான செயற்பாடும் ஏற்பட்டுள்ளன.

ஒலிபரப்புதலுடன்வியாபார நோக்கிற்காகஇசை ஒலிப்பதிவு செய்தலையும் குறிப்பிடவேண்டும். இதுவும் இசை உலகில் ஒரு குறிப்பிடத்தக்க புதிய முயற்சியாகும். வட்டமாக ஒலிப்பதிவுசெய்யும் கட்டத்தினை [illegible] ண்டநேரத்திற்கு செயற்படும் ஒலிப்பதிவு (நாடா)மாற்றியுள்ளது. கற்பித்தல், கல்வித் துறைகளில் இதன் முக்கியத்[illegible] மதிப்பிடக்கூடாது. ஒழுங்கான திருத்தமான இசை அறி[illegible] வளர்கின்றது. இளம் கலை முறையினைச் சேர்ந்த இசைக் கலைஞர் சட்டு கதைகளிலிருந்து வரலாற்றினைப் பிரித்து நோக்குகின்றனர். சம்பிரதாயச் சடங்குகளிலிருந்து கோட்பாடுகளைப் பகுத்து பார்க்கின்றனர். இசை நூல்களிற் கற்கப்பட்டுப் பிரசுரிக்கப்படுகின்றன. நூல்களை அவை எழுந்த காலச் சூழ்நிலையிலே வைத்துத் தான் விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு பெறப்படும் அறிவினை மிகக் கடுமையாகப் பயன்படுத்தக்கூடாது. மரபு வழி சாஸ்திரீய இசைக்கலைஞன் இசை நூலிலுள்ள எழுத்தின்படி செல்ல முற்படுவான் இது அபாயமானது. தவறான வழியிலே செல்லுவதாகும், இசைப்பயிற்சி, இசை இடைவேளைகள், இசை அரங்கில் இன்பம்கூட என்றும் தொடர்ந்து நிலவக்கூடிய வகையில மாற்றமடையாதனவல்ல. இவை சமாதானப் பயிற்சியினால் மாறுவன. நாடோறும் பாடுதல் (வாத்திய இசைப்) பயிற்சி செய்தல் ஆகியவற்றினால் இசை உருவாகியது.

யான் அறிந்த வரையில் இவ்வகையில் மிகச் சிறந்த தொண்டினை சென்னை இசை மன்றம் ஆற்றி வருகின்றது. இம்மன்றத்தின் விற்பனர் குழுவிலே தலை சிறந்த இசை வித்துவான்களும் அறிஞர்களும் உள்ளனர். ஆண்டு தோறும் நடைபெறும் மகாநாட்டிலே பல்வேறு ராகங்களில் லக்ஷணங்கள், இசை ஆசிரியரின் (உண்மையான) பெயர், இசைப்பாடல்கள், முக்கியமான நூல்கள் புதிய ஏட்டுச்சுவடிகளின் கண்டுபிடிப்பு அறியப்பட்டுள்ள நூல்களின் விளக்கம் முதலியன மிக முழுமையாக ஆராயப்படுகின்றன. இவ் ஆய்வுகள் மிகத் தரம் வாய்ந்தவை. ஆய்வு முடிவுகள் இம்மன்றத்தின் சஞ்சிகையிலே பிரசுரிக்கப்படுகின்றன. பெரும்பாலான இசைவிழாக்களிலே மனப்பூர்வமான ஆய்வுகள் நடைபெற்று வருதல் ஒரு முக்கியமான, ஒழுங்கான அம்சமாகும். அகில இந்திய வானொலி நிலையம் ஆண்டு தோறும் நடத்தும் சங்கீத சம்மேளனத்தில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அழைக்கப்படும் பெருந்தொகையான இசை விற்பன்னர் இசை பற்றிய சில முக்கியமான விடயங்கள் பற்றி ஆய்வு நடத்துவர்.

அச்சிட்டுப் பதிப்பித்தலின் (இசைப்பாடல்கள்) முறையிலும் பார்க்க தெளிவாகவும் பிழையற்றும் எழுத்துருப் பெற்று வருகின்றன. குறிப்பாக தென்னாட்டிலே இசைப் பாடல்களில் பதிப்பு நன்கு வளர்ச்சியடைந்துள்ளது, சங்கீத லிபிகள் நன்கு அபிவிருத்தியடைகின்றன. (இசை பற்றிய) மனப்பூர்வமான விமர்சனமும் நடைபெறுகின்றது. இசைக்கச்சேரி பற்றிய விமர்சனங்கள் தினசரிப் பத்திரிகைகளில் ஒழுங்காக வெளிவருகின்றன.

மேலைத்தேயத் தொழில் நுட்பவியல் இசையின் பௌதிகவியல் பற்றியறியத் துணைபுரிகின்றது. இசை வாத்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## யாழ்ப்பாணத்தில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதீனத்தைச் சேர்ந்தவர். தருமபுர ஆதீனத்தைக் சேர்ந்த ஆறுமுகத்தம்பிரானே கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்.

இந்நூலில் காணப்படும் கட்டுரைகளை எழுதுவதற்குப் பலர் உதவி புரிந்தனர். "திருவூடல்", "சுப்பிரமணியப் பிரபாவம்" எனுமிரு நூல்களை பொன்னுவெளி இலைப் பாறிய உடையார் ம. அம்பலம் அவர்கள் தந்துதவினர். இவர்களே புத்தகக் காட்சிக்கு நாவலரின் அரிய பழம் பதிப்பு நூல்களைத் தந்துதவியவர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் மகன் முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் சண்முகரத்தின ஐயர் நடாத்திய "ஞானப்பிரகாசம்" என்னும் சஞ்சிகை இதழ்களையும், திரிகோணாசல புராணத்துக்கு அவர்களின் தந்தையார் எழுதிய சிறப்புப் பாயிரத்தையும் தந்துதவினர். சண்முகரத்தின ஐயரின் மகள் கணேசையர் அவர்கள் தினகரனில் வெளிவந்த தந்தையாரின் படத்தையும் வேறு சில நூல்களையும் கொடுத்துதவினர். தினகரன் ஆசிரியர் மேற்படி கட்டுரைகளைப் படங்களுடன் அழகாகத்தமது பத்திரிகையில் வெளியிட்டனர். இவர்களுக்கெல்லாம் எனது நன்றி உரித்தாகுக.

இந்நூலில் குறிப்பிடப்படும் கொச்சிக் கணேசையரும், அனந்தசுப்பையரும் நாவலர் காலத்திலேற்பட்ட சமய இலக்கிய மறுமலர்ச்சிக்கு முன்னோடிகளாக விளங்கியவர்கள்! சண்முகரத்தினஐயர் நாவலர் மாணவ பரம்பரையில் வந்தவர். ஆறுமுகத்தம்பிரான் நாவலரின் சிறந்த மாணவர். ஆகவே இவர்களைப் பற்றிய நூலொன்று நாவலர் நூற்றாண்டு காலத்தில் வெளிவருவது பொருத்தமானதே. இப்பொழுது இந்நூலை வெளியிடக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திய திருவருளை வாழ்த்துகிறேன்.

---

## தோகையின் நகைகள்

காலை எழுந்த கதிரவனின் காட்சியினால்
சால மயங்கித் தலையசைக்கும் பூக்களினால்
கோல மடைந்த குளிர் மலிந்த பூங்காவில்
நீல மலர் விழியாள் நின்று செய்தாள்
கன்னிநகை

அந்தணர்தம் மந்திரமும் ஆன்றோர் தம்
ஆசிகளும்
வந்தொலித்த மண்டபத்தே வாழ்வின்
துணையாகிச்
சொந்தமுறும் வேளையிலே தோளோடு
தோள்மருவப்
பைந்தொடியாள் செய்தாளே பார்மேல்
அடுத்தநகை

முத்தோ? மரகதமோ? மூவுலகும் காணாப்பூங்
கொத்தோ? என வியப்புக்கொள்ளும்
வகையினிலே
சித்திரமாம் சேயதனைப் பெற்றெடுத்த
பூரிப்பில்
'அத்தான்' எனக் கூறிச் செய்தாள்
அடுத்தநகை

வீடுவந்த அன்பார் விருந்துக்கும்
சுற்றமெனத்
தேடிவந்த பண்பார் உறவுக்கும்
நற்பணிகள்
நாடி நின்று செய்து நயப் புரைகள்
கேட்கையிலே
கோடிபொருள் தோற்கப் புரிந்தாள்
குளிர்ந்தநகை

- புலவர் ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 869வது கிரிக்கட் டெஸ்டில் இந்தியாவின் சாதனை

## 27 ஆண்டுகளின்பின் கிடைத்துள்ளவெற்றி

டெஸ்ட் கிரிக்கட் உலகின் 869-வது டெஸ்டில் இந்தியக் கோஷ்டிக்கு பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வெற்றி கிடைத்துள்ளது.

கிரிக்கட் ரசிகர்களுக்கு குறிப்பாக தமிழக ரசிகர்களுக்கு இவ்வாண்டு கிடைத்துள்ள பொங்கல் பரிசு இரட்டிப்புத் தித்திப்பாக அமைந்துவிட்டது.

உலகின் பலம்வாய்ந்த கிரிக்கட் கோஷ்டிகளில் ஒன்ருன அஸிவ்இக்பால் தலைமையிலான பாகிஸ்தான் கோஷ்டியை தமிழ்நாடு சென்னை சிதம்பரத்திலுள்ள சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற 5-வது கிரிக்கட் டெஸ்டில் இந்தியக் கோஷ்டி அமோக வெற்றியீட்டியதுடன் 79-80ம் ஆண்டு 6 டெஸ்ட் தொடரிலும் வெற்றியீட்டியது.

18 ஆண்டுகளின் பின் மீண்டும் பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த78ல் 3 டெஸ்ட்தொடரில் ஆடிய பிஷன்சிங் பேடி தலைமையிலான இந்தியக் கோஷ்டி இழந்த வெற்றிக்கிண்ணத்தை சுனில் கவாஸ்கர் தலைமையிலான இளம் வீரர்களைக் கொண்ட தற்போதைய குழு இப்போது மீட்டுள்ளது.

காப்டன் சுனில் கவாஸ்கரின் மதிநுட்பம் மிக்க தலைமையும் இளம் ஆட்டக்காரர்களான கபில்தேவ், ஜஸ்பால் சர்மா, ரோஜர்ஸ் பின்னி ஆகியோரின் அபார ஆட்டமுமே இந்தியக் கோஷ்டியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தன.

நடந்து முடிந்த ஐந்து டெஸ்டுகளிலும் இரண்டு டெஸ்டுகளில் இந்தியாவுக்கு வெற்றி கிடைத்திருந்தபோதிலும் டெஸ்ட் தொடர் வெற்றிக்கு வழி வகுத்த 5-வது சென்னை டெஸ்டே கிரிக்கட் ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டுவிட்டது.

இந்த டெஸ்டில் இந்திய வீரர்கள் தமது அபார ஆட்டத்தினால் ரசிகர்களை மகிழ்வித்துக்கொண்டிருந்த அதே வேளையில் சென்னை வானொலியும் இந்த டெஸ்டின் நேர்முகவர்ணனையைத் தமிழில் நிகழ்த்தி பட்டி தொட்டிகளில் எல்லாம் வாழும் பாமர மக்களுடன் சிறுவர்களையும் இதில் நாட்டம்கொள்ளச் செய்துவிட்டனர்.

இந்த டெஸ்ட் தொடர் வெற்றியின் ஆரம்பப்படி பம்பாயில் நடைபெற்ற 3-வது டெஸ்டில் கிடைத்த 131 ஓட்ட வெற்றியேயாகும்.

1952-ம்ஆண்டுக்கு அதாவது 27 ஆண்டுகளுக்குப்பின்னர் இந்தியக் கிரிக்கட் கோஷ்டி ஒன்று பாகிஸ்தான் கோஷ்டியை வெற்றிபெற்றது இதுவே முதல்தடவையாகும்.

இந்த பம்பாய் டெஸ்டில் கூட இந்திய இளம் வீரர் கபில்தேவ் தமது பங்களிப்பை சிறந்தமுறையில் வழங்கத் தவறவில்லை.

இதில் இவர் வெகு வேகமாக அடித்துக்குவித்த 69 ஓட்டங்களே ஆட்டத்தைத்திசை திருப்பி இந்திய வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது.

இந்த டெஸ்ட் தொடரில் இந்தியக் கோஷ்டிக்கு வெற்றி கிடைத்த இரண்டு டெஸ்டுகளிலும் வேகப்பந்துவீச்சு வீரர் கபில்தேவ் பந்து வீசுவதிலும் சரி தடுப்பெடுத்தாடுவதிலும் சரி முன்னணியே வகித்தார்.

### சிறந்த வீரர் கபில்தேவ்

இரு டெஸ்டுகளிலுமே சிறந்த வீரருக்கான பரிசைச்

'கண்டோஸ்'

சுவீகரித்துக்கொண்ட கபில் தேவ் சென்னை டெஸ்டிலேயே தமது முழுத்திறமையையும் காட்டி இருக்கிருர்.

சென்னை டெஸ்டில் 11 விக்கட்டுக்களைக் கைப்பற்றிய இவர் கொடுத்த ஓட்டங்கள் 146 மட்டுமே. 2-வது இன்னிங்ஸில் மட்டும் அவர் 56 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கட்டுகளைக் கைப்பற்றினுர்.

முதல் இன்னிங்ஸில் வெகு அபாரமாக ஆடி ரசிகர்களை தம்பக்கம் கவர்ந்திழுந்த இவர் 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதுவரை 24 டெஸ்டுகளில் விளையாடிய இவர்இதுவரை 99 விக்கட்டுகளைக் கைப்பற்றியது மட்டுமன்றி 994 ஓட்டங்களையும் விளாசித்தள்ளினுர்.

பல வருடங்களாக இந்தியக் கோஷ்டிக்கு ஒரு சிறந்த வேகப் பந்துவீச்சு வீரர் இல்லாமலிருந்த பெரும்குறை இவரது வருகையால் நீங்கியது மட்டுமன்றி இந்தியக் கோஷ்டியை மீண்டும்புகழ்ஏணிக்கும்ஏற்றிச் செல்கிறது.

### சாதனைவீரர் கவாஸ்கர்

புகழ் ஏணியில் வெகுவேகமாக முன்னேறி வரும் இந்தியாவின்வெற்றிகளுக்கெல்லாம் நாயகனுக இருப்பவர் காப்டன் சுனில் கவாஸ்கரே ஆகும்.

உலகின் சிறந்த ஆரம்ப தடுப்படி வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்துவருபவரும் டெஸ்ட் கிரிக்கட் உலகின் பல முன்னைய சாதனைகளை முறியடித்து வருபவருமான கவாஸ்கரின் தலைமைஇதுவரை தோல்வியையேசந்தித்ததில்லை. இவர் தலைமையில் ஆடிய இந்தியக்குழுவினரை உலகில் எந்த ஒருகோஷ்டியினுலும்இதுவரை தோற்கடிக்க முடியவில்லை.

டெஸ்ட் ஆட்டங்களில்5,500 ஓட்டங்களை இதுவரை பெற்ற இவர் சகல நாடுகளினது டெஸ்ட் கிரிக்கட் குழுக்களுக்கு எதிராகவும் 'செஞ்சரி'களைப் பெற்றுள்ளார்.

23 செஞ்சரிகளை இவர் இதுவரை அடித்துள்ளார். ஆகக்கூடுதலான செஞ்சரிகளைப் பெற்றவர்களில் டொனல்ட் பிராட்மன், ஹரி சோபர்ஸ் ஆகியோருக்கு அடுத்தபடியாக இவர் மூன்ருவது இடத்தை வகிக்கின்ருர்.

ஒரே டெஸ்டில் இரு இன்னிங்ஸ்களிலும் 'செஞ்சரி'களை இவர் மூன்று டெஸ்ட்களில் அடித்துள்ளார். இந்தச்

(9-ம் பக்கம் பார்க்க)

# இசையில் புதிய வடிவங்களை-

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தியங்களின அமைத்தல் அவற்றின் அளவுகள் ஒலி செல்லும் தூரம் முதலியன பற்றிய ஆராய்ச்சி தொடங்கிவிட்டது. இதனுலே வாத்தியங்களின் தன்மை அறியாத வகையில் நன்கு திருத்தமடையும். நாடெங்கிலும் (இசைக் கச்சேரி) மண்டபங்களில் அமையவேண்டிய ஒலியமைப்புப் பற்றிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு தில்லியிலே ஒலியமைப்புக் கொண்ட மண்டபம் ஒன்றுமே இருக்கவில்லை. ஆனுல் தற்பொழுது சுமார் அரை டசின் மண்டபங்கள் உள்ளன. மேலும் சில கட்டப்படுகின்றன. முன்னையிலும் பார்க்கப் பிரயாணம் இலகுவாகவும் விரைவாகவும் ஏற்படுவதால் இசை வித்துவான்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லக் கூடியவராக உள்ளனர்.

இறுதியாக அரசின் தொண்டினைக் குறிப்பிடலாம். சங்கீத நாடக மன்றம் 1953ல் நிறுவப்பட்டது. புதிய இசை எழுச்சியிலே இத்தகைய நிறுவனம் செய்யக்கூடிறவை எல்லையற்றவை. இதுதான் அதிகாரமுள்ள நிறுவனமாகும். (இந்திய) இசை உலகினை அளவிட்டு ஆராய்ச்சிக்குத் துணை செய்வதே இதன் பிரதான செயல்களாகும். இது கிராமிய இசை உட்பட இசைவிழாக்கள், கருத்தரங்குகள், நடனவிழாக்கள் முதலியவற்றை ஒழுங்கு செய்து (அல்லது ஒழுங்கு செய்வதற்கு உதவியும்) வருகின்றது. இசைக்கல்வியினைப் பரப்பி வரும் நிறுவனங்களும் தலைசிறந்த தகைமையுள்ள தனிப்பட்ட இசைவித்துவான்களுக்கும் இது பண உதவி அளிக்கின்றது, இசைத்தட்டுக்கள், இசைப்பதிவு, நாடாக்கள் ஆகியன கொண்ட பெரிய சுவடிச்சாலையொன்றையும் ஆயத்தம் செய்து வருகின்றது. உலகம் எங்கும் நாடுகளுடன் இசை வித்துவான்களையும், கலாச்சாரத் தூதுக் குழுக்களையும் அனுப்பிக் கலாச்சாரப் பரிமாற்றம் செய்தல் மூலம் இந்திய இசை அறிஞரின் அறிவு வட்டம் விரிவடைகின்றது. இப்பரிமாற்றம் இருபுறமான (இந்தியாவுக்கும், இந்தியாவிலிருந்தும்) நடைபெறுகின்றது. ஆண்டுதோறும் ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் (கிழக்கிலிருந்தும்) இசை அறிஞர்களும் இசைக் குழுக்களும் இந்தியாவுக்கு வந்து செல்கின்றனர். அதே வேளையில் இந்தியாவுக்கு வெளியே இந்திய இசை வித்துவான்களின் குரல் அதிகம் அதிகமாக ஒலிக்கின்றது. இவ் இசைப் பரிமாற்றங்களினுல் நாம் (இந்தியர்) புதிய முன்னறியாத இசைகளையும் முற்றிலும் புதிய (இசை) ஒலிகளையும் கேட்கிறேம்.. எமது (இந்திய) இசைச்சிந்தனையிலேற்படக்கூடிய மிக நுண்ணிய மாற்றங்களே இத்தகைய தொடர்புகளிலேற்படக்கூடிய நிரந்தமான, முக்கியமான விளைவுகளாகும், மிகப்பழைய நன்கு நிலை பெற்ற மரபுகள் கூட மேலும் நன்கு வளர்ந்து செழிப்பாக வளம்பெற ஊக்குவிக்கும் சக்திகளாக மேற்குறிப்பிட்டவை அமைகின்றன. இருபதாம் நூற்ருண்டுச் சூழ்நிலையிலும் விரைவாக மாறிக் கொண்டு செல்லும் எமது (இந்திய) சமூக அமைப்பு நிலையிலும் இந்திய இசை மரபு மலர்ச்சியடைவதே விரும்பத்தக்கது. இதன் இயல்பு, வலு, தனித்துமாகியனவற்றை மீருது இதனைச் சாதிக்கலாம், சாதிக்க முடியும். இத்தகைய வளர்ச்சியே பாதுகாப்புள்ள தேங்கு நிலையிலிருந்து இந்திய இசையினைச் சர்வதேச (இசையின்) ஆக்கங்களில் செயற்பாட்டிலிட்டு அதனை வளமாக்கும். அதனுல் வளம்படுத்தப் பெறும்.

இவையாவும் எமது மரபு வழி இசையின் முடிவு எனப் பல அறிஞரும் இசை விற்பன்னரும் கொள்ளும் கருத்தினை யான் (கட்டுரையாசிரியர்) ஏற்றுக்கொள்ளமாட்டேன். இங்கு இரு அம்சங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று யாதெனில் இசையில் மரபுக்குப் புறம்பாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள பெரும்பாலான பரீஷார்த்த முறைகளும், புரட்சிகரமான புதிய மாற்றங்களும் பெரும்பாலும் ஒரு தலைமுறையிலே பொதுவாக நிலவும் மரபில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. மற்றது என்னவெனில் புதிய வளர்ச்சிகள் எனக் கொள்ளும் போது அவை பழைய பாணிகளினதும் அழிவு என்பது அவசியமன்று. ஐரோப்பாவிலே சிம்பனி வாத்தியக் குழுஇசை வளர்ச்சியும் மிக அண்மையில் Concrete Music Electronic music, Chamber Music ஆகியவற்றின் வளர்ச்சியும் எழுதப்படுதலையோ அல்லது வெறும் கிராமியப் பாடல்கள் பாடப்படுதலையோ அழித்தில. பலெஸ்றினு அல்லது பேர்சல் பக் அல்லது மோஸார்ட் ஆகியோர் இருபதாம் நூற்ருண்டிலே மறக்கப்பட்டிலர். எமது (இந்திய) மரபுவழித் தனியிசையும், எதிர்காலத்தில் வரக்கூடிய வடிவங்களைச் சுட்டிக் காட்டும் புதிய இசை முறைகளும் அருகருகே நிலவுதல் நியாயமானதே. இது காலப் போக்குடன் செல்லும் [illegible] மட்டுமன்றி, அ[illegible] வசியத்தை ஏற்றுக்கொள்ளுவதுமாகும். (முற்றும்)

# இலங்கையில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிர்வாகசபை உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், மேற்கத்திய கல்வி பயின்றதொழிற்சங்கத்தலைவர்கள் ஆகியோர் இடம்பெறுவர்.

கீழ்த்தர மத்திய வகுப்பினருள் ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், சிறு வியாபாரிகள், ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களும் அடங்குவர்.

இம்மத்திய வகுப்பினர் மேற்கத்திய கல்வியைக் கற்றமையினுல் அவர்களுடைய பழக்க வழக்கங்கள், நடை, உடை, பாவனைகள் மேற்கத்திய பாணியில் அமைந்து காணப்பட்டன. உயர்தர மத்திய வகுப்பினரே இலங்கையின் சட்டசபையிலும் அங்கத்துவம் பெற்றனர். இவ் உயர்தர மத்திய வகுப்பு 19-ம் நூற்ருண்டிலும், 20-ம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் இலங்கையில் அரசியல் செல்வாக்கு பெற்ற ஒரு வகுப்பாக இயங்கி வந்தது.

இலங்கை மத்திய வகுப்பினர் ஆங்கில மொழியையும், மேற்கத்தைய பாணியையும் பின்பற்றியதோடு மட்டும் நில்லாது, மேற்கத்தைய விளையாட்டு முறைகளையும் இலங்கையில் பின்பற்றினர். இவற்றுள் கிரிக்கெட், றகர், உதைபந்தாட்டம், ரெனிஸ் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இலங்கையில் பிரித்தானிய ஆட்சி ஆரம்பித்த காலத்தில் பறங்கியரே மத்திய வகுப்பு நிலையை அடைந்திருந்தனர். நாட்டில் ஏற்பட்ட புதிய அபிவிருத்திக்கேற்றவாறு அவர்கள் தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர், அரசாங்க உயர் பதவிகளில் பறங்கியர் அமர்ந்திருந்தனர். 1870-ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் மத்திய வகுப்பினரின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. இக்காலத்தில் அரசாங்கத் திணைக்களங்கள் விரிவடைந்ததால், உத்தியோகம் பெறுவதற்கான வசதிகள் அதிகமாயின. பறங்கியரோடு மேல்மாகாண சிங்களவரும், யாழ்ப்பாணத் தமிழரும் அரசாங்க உத்தியோகங்களில் சேர்ந்தனர், கிரெகரி தேசாதிபதியின் காலத்தில் சில சிங்களவர்கள் முதலியார் பதவி கூடப் பெற்றனர். கண்டிச் சிங்களவரிடம் இம்மாதிரியான உத்தியோகங்களில் நாட்டம் செல்லவில்லை. அங்கே சாதிக் கட்டுப்பாடு இறுக்கமாக இருந்தபடியால் அவர்கள் பிறப்பையே பெரிதாக மதித்தார்களன்றி பதவிகளை மதிக்கவில்லை.

19-ம் நூற்ருண்டின் இறுதியில் ஓரளவு செல்வாக்குள்ள மத்திய வகுப்பினர் இலங்கையில் தோன்றினர் எனலாம். உயர்ந்த படிப்பறிவும், கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றமான வசதிகளும் இலங்கையில் மத்திய வகுப்பின் நிலையை உறுதிப்படுத்துவனவாக அமைந்தன. இலங்கையில் பிரித்தானியர் மேற்கொண்ட சீர்திருத்தங்களினுல் இலங்கைச் சமூகத்தில் ஒரு புதிய வகுப்பு தோன்றியது. அவ்வகுப்பே இலங்கையின் சமூக அமைப்பில் இன்று பிரதான இடத்தை வகிக்கும் மத்திய வகுப்பாகும்.

பிரித்தானியர்களினுல் நிறுவப்பட்ட பெருந்தோட்டங்களும் மத்திய வகுப்பினருக்கு வேலைவாய்ப்பை அளித்தன. பெருந்தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இங்கிலாந்து மற்றும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக கொழும்பிற்கு அனுப்பப்பட்டன.

இப்பெருந்தோட்டங்கள் அமைந்த பகுதிகளில் சிறு நகரங்கள் எழுந்தன. நூற்றுக்கணக்கான ஒப்பந்தகாரரும், வியாபாரிகளும், போக்குவரத்து ஏஜெண்டுகளும் பெருந்தோட்டங்களில் வேலை வாய்ப்பைப் பெற்றனர். இத்தகைய உத்தியோகங்களின் மூலம் பெருமளவில் வருமானம் பெற்ற இலங்கையர் கோப்பி, தேயிலை, தென்னந்தோட்டங்களை சிறிய அளவில் வாங்க முனைந்தனர்.

பிரித்தானியர்களினுல் அறிமுகம் செய்யப்பட்ட புதிய நிர்வாக முறை இலங்கை மக்களுக்கு சாதி, மத, இன வேறுபாடின்றி பெருமளவில் அரசாங்க உத்தியோகங்களை வழங்கியது. பிரித்தானிய அரசாங்கம் இலங்கையில் பல சட்ட நீதிமன்றங்களை நிறுவியமை வழக்கறிஞர்களின் தேவையை அதிகரித்தது. தனிப்பட்ட பாடசாலைகள் இலங்கையில் நிறுவப்பட பிரித்தானிய அரசாங்கம் உதவி நன்கொடை அளித்தமையால் ஆங்கிலப் பாடசாலைகளின் தொகை அதிகரித்தது. இதன் மூலம் இலங்கையர்கள் ஆசிரியத் தொழிலில் ஈடுபடவும் வாய்ப்புக் கிடைடத்தது,

நகரங்கள் எழுச்சியடைந்தமையினுலும், பெருந்தோட்டங்கள் அபிவிருத்தியடைந்தமையினுலும் பெருந்தொகையான மக்கள் இவ்விடங்களில் வந்து குடியேறத் தொடங்கினுர்கள், இதனுல் அவர்களின் சுகாதாரத் தேவைகளைக் கவனிக்க வைத்தியர்கள் தேவையாக இருந்தது. இதன் பொருட்டு வைத்தியக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு வைத்தியத் தொழிலும் அபிவிருத்தியடையத் தொடங்கியது.

மேற்கூறிய காரணங்களினுல் பெருந்தோட்டக்காரர்கள், வணிகர்கள், வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கிய மத்திய வகுப்பொன்று 19-ம் நூற்ருண்டின் இறுதிப்பகுதியில் இலங்கையில் தோற்றம் பெற்றதென்பது தெளிவாகின்றது.

இவ்வாறு தோற்றம் பெற்ற மத்திய வகுப்பினர் அரசியலில் மிகவும் சிறிய செல்வாக்கைப் பெற்றிருந்தாலும் சமுதாயத்தில் மிகவும் செல்வாக்கு பெற்றவர்களாக விளங்கினர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாதிரிக் கவிநயம்

## சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா...

### 1. கவிதையின் இலக்கணம்

உள்ளத்துள்ளது கவிதை-
இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த
தமிழில்-உண்மை
தெளித்துரைப்பதுகவிதை

என்று கவிதைக்கு நல்லதோர் வரைவிலக்கணம் வகுத்தவர் கவிமணி. அவ்விலக்கணத்தின் சொல்லுருவாக அமைகிறது, 'சுட்டும் விழிச்சுடர்தான்...' எனும் பாரதியின் பக்திப் படைப்பு.

பாரதியின் உள்ளத்தே உறைந்துகிடந்த இறைபக்தி இன்பத் தமிழ்க் கவிதையாக மாறி படிப்பவர் மனதிலே இன்பம் உருவெடுக்கவைக்கிறது, தெள்ளத் தெளிந்த தமிழ்நடை மனதை மயக்குகிறது. சக்தியை கண்ணம்மா எனும் காதலியாகவும் தன்னைக் காதலனாகவும் கொண்டு நாயக-நாயகி பாவத்துடன் பாரதி படைத்த கவிதை- 'பரம்' என்ற உண்மைப் பொருளை தெளித்துரைக்கிறது. ஆகவே மேற்போந்த வரைவிலக்கணத்தின் வடிவாகி இலட்சியக் கவிதையாக இலங்குகின்றது.]

### 2. கற்பனை

'உடம்பொடுயிரிடை
யென்ன மற்றன்ன
மடந்தையொடெம்மிடை
நட்பு'

எனக் காதற் சிறப்புரைக்கும் குறளின்உயிரோவியமாக உலாவுபவன் அவன், அவன்காதல் வயப்பட்டுக் காணும் பொருளிலெல்லாம் கண்ணம்மாவின் கோலத்திருவுருவைக் காண்கிறான். இதைத்தான் வள்ளுவன்

'கருமணியிற் பாவாய் நீ
போதாயாம் வீழும்
திருநுதற்கில்லை இடம்'

எனக் கூறினான்,

கண்ணம்மாவின் கயல்விழிகளைப் பார்த்தபின் வானிலே தவழ்கின்ற கதிரொளியையும் கலையொளியையும் காணும் அவன், மனதிலே ஐயம் பிறக்கிறது. கூடவே அழகான கவிதை பிறக்கிறது. சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ? என்றவன் கண்களிலே வானத்துக்கருமை கண்ணம்மாவின் கருவிழியின் நினைவினை எழச் செய்கிறது. வட்டக்கரிய விழி கண்ணம்மா வானத்துக் கருமைகொல்லோ? என வினவுகிறான். நட்டநடு நிசி வானிலே இருந்து சிரிக்கும் உடுக்கள் எல்லாம் கண்ணம்மாவின் கொடியுடலைச் சுற்றி இருக்கும் பட்டுச் சேலையில் பதித்த நல் வயிரங்களாக அவனுக்குத் தெரிகிறது.

விண்ணிலிருந்து மண்ணுக்கு வருகிறான், மதனச்சோலையிலே வண்ண வண்ண மலர்கள் இதழ்விரித்துச் சிரிக்கும் சிரிப்பு கண்ணம்மாவின் சுந்தரப் புன்னகையாக அவனுக்குத் தோன்றுகிறது. மருதத்திலிருந்து நெய்தலுக்குத் தாவுகிறது அவன் மனம். அங்கே அலைக் கரம்நீட்டி அவனியை அணைக்கத் துடிக்கும் கடல்மகள் மன ஆசை அடங்காதவளாய் ஓவெனக் குமுறி அலைவீசுகிறாள். அக்காட்சி அன்பலையில்-ஆசை அலையில் குமுறும் கண்ணம்மாவின் மனமாக அவனுக்குத் தென்படுகிறது. 'நீலக் கடலலையோ உனது நெஞ்சினலைகளடி' என அவன் பாடுகிறான். நெய்தலில் நின்று முல்லைக்குப் பாய்கிறது. அங்கே கூவும் குயிலோசை கண்ணம்மாவின் குரலினிமையாக அவனுக்குத் தோன்றுகிறது. இவ்வாறாக இயற்கை முதலாகக் காணும் பொருளிலெல்லாம் கண்ணம்மாவை காண்பதால் பருவக் காதல் - மாறாக்காதல் கொண்டேன் என்று கூறுகிறான். காதலின் வேகத்தில் சாத்திரங்களேதுக்கடி என்றவன் மூத்தவர் சம்மதமும் வதுவைத் திருமணமும் பின்புவைத்து அவள் கட்டுக்குலையாத பட்டுடல் இறுகப்பற்றி முத்த மழை-அன்புமழை பொழிகின்றான். பாரதியின் கற்பனை அல்லவா? உணர்ச்சி நரம்புகளைச் சுண்டி இழுக்கும் உயிர்த் துடிப்பு நிறைந்தகற்பனையைக் காண்கிறோம்.

### 3. சொல்வளம்

(அன்புணர்ச்சி கலந்த காதலன் காதலிப்பேச்சினை கவிதை காட்டுகிறது (முதலாவது பாடலில் எதுகையாக அமையும் சுட்டும் வட்டக்- பட்டு- நட்ட என்ற சொற்களில் வல்லொற்று மிகுந்துநின்று அவன் அழகை அப்படியே அவஸ் சுட்டிக்காட்டும் தன்மையைக் காட்டுகிறது. இரண்டாவது பாடலில் மெல்லினமும் இடையினமும் முதல் சீர்களிலும் இரண்டாம் சீர்களிலும்கலந்து நின்று சோலை மலரொளியின் குளிர்மையினையும்,கோலக்குயிலின் குரலினிமையையும் எடுத்துக் காட்டுகிறது. இறுதிச் செய்யுளில் காதல்வேகம் பெருகுதலால் 'த்' எனும் வல்லெழுத்து மிகுந்து அவன் உணர்ச்சிக்கேற்ற துடிப்பை படிப்பவன் மனத்திலும் ஏற்படுத்துகிறது. மேலும் வானக்கருமை- நீலக்கடலலை - குயிலோசை போன்ற சாதாரண சொற்கள் கவிதை வேலிக்குள் சிக்குண்டு பாரதியின் மனஉணர்ச்சியால் உயிரூட்டப்படுகையில் புதியதோர் அழகைப்பெறுகிறது. அத்துடன் சோலைமலரொளி எனும் புதியதோர் சொல்லாட்சியை பாரதி ஏற்படுத்தி சோலையில் சிரிக்கும் மலர்களுக்கும் ஒளியூட்டும் தன்மை அவன் மாகவி என்பதன் எடுத்துக்காட்டு.

### 4. ஒலிநயம்(ஓசை)

ஆரம்பத்திலே சூரிய சந்திரரோ? கருமை கொல்லோ? என ஒலிக்கும் 'ஓங்கார ஒலி' அவன் மனத்து சந்தேகத்தை படிப்பவன் இதயத்திலே பதித்துவிடுகிறது, அவ்வாறே 'அடீ'என்ற அசைச்சொல்அவனது அன்புரிமையையும்காதல் வேகத்தையும் வெளிப்படுத்துகிறது, இறுதிச் செய்யுளில் ''இதுபார்'' எனும் சொற்றொடர் ஏற்படுத்தும் ஒலிநயமானது அவன் காதல் வேகத்தின் உச்சத்தில் விளையும் முத்தமழையின் சத்தமாக ஒலித்து படிப்பவனை பரவசப் படுத்துகிறது. பாட்டுக்கோர் பாரதியல்லவா. ஒலிநயத்தின் மூலம் உணர்ச்சியின் எல்லைக்கே அழைத்துச் செல்கிறான்.

### 5 அணிகள்

(i) உவமை:-

கண்ணம்மாவின் மின்னும் கயல் விழிகளுக்கு சூரிய சந்திர ஒளியையும், அவள் வைரமிழைத்த பட்டுச் சேலைக்கு கருநீலவானில் சுடர்விடும் உடுக்களையும், அவளின் சுந்தரப் புன்னகைக்கு சோலை மலரொளியையும், அவளின் குரலினிமைக்கு கோலக்குயிலோசையையும், அவளின் மனத்துடிப்புக்கு நீலக்கடலலைகளையும் வர்ணிக்கும் கவித்துவம் அலாதியானதே.

(ii) உவமைத்தொகை

வட்டம் போன்ற கரிய விழிகள் என்று கூறாமல் வட்டக்கரியவிழிஉவமைத்தொகையில் சொல்லப்பட்டதினால் அழகு மிகைப்படுகிறது.

(iii) உருவகம்

சுடர் போன்ற விழிகள் அவள் கண்கள் என்று கூறப் போந்த கவிஞன் சுடர் விழிகள் என்று கூறாமல் விழிச் சுடர் என்று உருவகிப்பதனால் உள்ளத்தே புதியதோர் உணர்ச்சியை ஏற்படுத்துகிறார்.

(iv) உயர்வு நவிற்சி:-

கண்ணம்மாவின் கண் ஒளியை சூரிய சந்திரரின் ஒளிர்வுடன் ஒப்பிடுவதன் மூலம் உயர்வு நவிற்சி அணி அமைக்கிறான் கவிஞர்.

(v) தற்குறிப்பேற்றம்:-

சோலையில் மலர்கள் இதழ் விரித்துச் சிரிக்கையில் நாம் காணும்போது நம் கண்களிலே ஒருவித மயக்கம் ஏற்படுதல் இயல்பே. அதனை சோலை மலரொளி எனச் சிறப்பித்துக்கூறும் கவிஞன் அவ் இயற்கையான அழகு கண்ணம்மாவின் சுந்தரப் புன்னகைக்கு உண்டு என தற்குறிப்பேற்றம் கொடுக்கிறான். அவ்வாறே குமுறும் நீலக் கடலலை போல் குமரியவள் பருவநெஞ்சம் காதலால் குமுறுகிறது எனக் காட்டுவதும் தற்குறிப்பேற்றமே. இவ்வாறாக அணி நலன்களால் சிறப்புப் பெற்றுத் திகழ்கிறது இக்கவிதை.

### 6. தொடைநயங்கள்

ஒவ்வோர் அடியிலும் சுட்டும், சூரிய, வட்டவானக், பட்டுப் பதித்த, நட்ட, நட்சத்திரங்களடீ போன்ற எழுத்துக்கள் தொடைகளாக அடிமோனையாக அமைகிறது. அவ்வாறே நட்ட நடுநிசி என்பதில் முதல் இரு சீர்க்கண்ணும் 'ந' வந்து இணை மோனையாகிறது. அவ்வாறே சுட்டும் விழிச் சுடர் என்பதில் 1-ம், 3-ம் சீர்களில் 'சு' வந்து பொழிப்பு மோனையாகிறது. இவ்வாறாகப் பாடல் முழுவதும் மோனைநயம் சிறந்து மிளிர்கிறது.

இறுதிச் செய்யுளிலே சாத்திரம் சாத்திரம் என சொல் இயைபு பெறுவதைக் காணலாம். அடுத்த அடியில் ஆத்திரம் சாத்திரம் எனஅடி எதுகை வருவதைக் காணலாம்.

இவ்வாறாக மோனை, இயைபு, முரண், எதுகை, அளபெடை ஆகிய தொடை நயங்கள் செய்யுளிலே செழிப்புற்றுக் காணப்படுகின்றன.

### 7. குறிப்புப்பொருள்

இப்பட... பாவத்தில் அமைந்திருப்பதால் அகப்பொருள் பாட

(9-ம்பக்கம் பார்க்க)

### ஒன்பதாம் வாய்ப்பாட்டின் விசித்திரம்

9×1=9
9×2=18    1+8=9
9×3=27    2+7=9
9×4=36    3+6=9
9×5=45    4+5=9
9×6=54    5+4=9
9×7=63    6+3=9
9×8=72    7+2=9
9×9=81    8+1=9
9×10=90    9+0=9
9×11=99    9+9=18
1+8=9
9×12=108    10+8=18
1+8=9

இப்படிச் செய்தால் தொடர்ந்து இதேபோல் வந்துகொண்டிருக்கும்.

**க. அருந்தவராசா,**
சிவப்பிரகாச
மகாவித்தியாலயம்,
சங்கானை.

# கொரில்லா அரக்கன்

## அத்தியாயம்-18

பாவம் வேலன்! அவனைத் தடுத்தது உண்மையிலேயே கொரில்லா அரக்கனல்ல. வேலனின் செல்லக்கிளியே! வேலனின் கிளியும் அவனின் அவசர புத்தியை எண்ணி மனம் வருந்தியது.

எனினும் வேலனை மீண்டும் உயிர் பெறச் செய்வதற்கு சிங்கராஜக்காட்டில் வாசம் செய்யும் குமரமுனிவரின் உதவியை நாடியது.

உடன் அங்கிருந்து வேகமாகப் பறந்த மலைகளையும் காடுகளையும் கடந்து காட்டின் மத்தியில் அமைந்திருக்கும் குமர முனிவரின் ஆச்சிரமத்தை அடைந்தது.

அங்கு குமரமுனிவர் தியானத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்ட கிளி அருகிலிருந்த மரத்தில் அமர்ந்துகொண்டது;

சிறிது நேரத்தின்பின் கண் விழித்த குமரமுனிவர் 'நல்வரவாகட்டும் ராமமாபுரத்து இளவரசர் சந்திரசேனனே!' என்றார்.

உடனே கிளியும் கீழே இறங்கி முனிவருக்கருகில் வந்து 'சுவாமி! தங்களின் தவவலிமையினால் நடந்தவற்றை எல்லாம் அறிந்திருப்பீர்கள். வேலன் எனது சொல்லையும் கேளாது மாயவெளிக் காட்டுத்தேவதையைத் தீண்டினான். இதனால் தற்பொழுது காட்டுத்தேவதையின் சாபத்தினால் கற்சிலையாகியுள்ளான். அவன் மீண்டும் உயிர் பெற தயவுகூர்ந்து ஒரு யோசனை கூறுங்கள்' என்றது.

இதைக் கேட்டு குமரமுனிவர் தலையை அசைத்துவிட்டு சிறிது நேரம் கண்ணைமூடியபடி சிந்தித்தார். பின்னர் வேலனை மீண்டும் உயிர்பெறச் செய்வதற்கான முறையைத் தனது ஞானத்தால் கண்டறிந்து அம்முறையை கிளியிடம் கூறினார்.

'ராமமாபுர இளவரசரே! நான் கூறியபடி நீ தங்கப் புட்டியை எடுத்துவந்து வேலன் மீது அதனை ஊற்ற வேண்டும். அப்போதுதான் வேலன் கற்சிலை உரு நீங்கி மீண்டும் உயிர் பெறுவான். ஆனால்...! ஒன்று நீ இன்றிலிருந்து சரியாக மூன்று தினங்களுக்குள் செய்தால்தான் வேலனை மீட்பாய்!' என்றார் குமரமுனிவர்.

குமரமுனிவர் கூறியவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டுவிட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து பறந்தது கிளி!

பின்னர் கிளி இங்கிருந்து ஆயிரம் மைல் தொலைவிலுள்ள இந்துசமுத்திரத்தை எப்படி அடைவது எனச் சிந்தித்தது.

'ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள இந்துசமுத்திரத்தை அடையவே எனக்கு மூன்று நாட்கள் போதாதே! என்ன செய்வது?' எனக் கவலைப்பட்டது கிளி.

(9-ம் பக்கம் பார்க்க)

**வி. சந்திரகுமார்**

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

### அழகே அழகு!

பெண்ணும் அழகல்ல
ஆணும் அழகல்ல
கவர்ச்சியென்றும்
அழகல்ல
அறிவோர் சொல்லும்
பண்பே அழகுக்கழகு.

**கா. சு. தனலட்சுமி**
காரைநகர் இந்துக்
கல்லூரி.

[கடந்தவாரஎண்ணத்தில் யாழ். இந்துக்கல்லூரி மாணவர் மாஸ்டர் மணியம் எழுதிய 'ஆணு பெண்ணு'என்ற கவிதைக்குப் பதில் அளிக்கும்வகையில் பல மாணவ மணிகள் கவிதைகளை எழுதியுள்ளனர். அவற்றில்ஒன்றே இங்கு பிரசுரிக்கப்படுகிறது.]

யாழ். இந்துக் கல்லூரி உப அதிபர் திரு. அப்பாத்துரை கருணாகரர் நைஜீரியாவில் உயரதிகாரியாகப் பதவியேற்றுச் செல்கிறார். அவரின் சேவையைப் பாராட்டி இங்கு கவிதை மழை பொழிகிறது.

### வாழ்த்துக்கவி

இயற்கை எழில் நிறைந்த
ஈழம் தன்னில்
வள்ளல்கள் அறிஞர்கள்
வாழ்கின்ற நல்
வட்டுக்கோட்டையில்

வைத்திய கலாநிதி யாய்
மலேயா நாட்டு மக்கள்
போற்றும் மாண்புடைய
அப்பாத்துரைக்கு
அருட்புதல்வனாய்
அகிலம் தனில் உதித்த
நற் கருணாகரா!
அழகான தோற் றமிதைக்
கண்டு பெற்றோர்
அறிவான அரன்
பாண்டியன் திருநாமம்
கொண்டு
பள்ளி பறிவினைக் கொடுக்க
நற்பாடசாலையாம்
சம்பத்திரிசியார்
கல்லூரியில்
பயின்று பல பண்பும்
பெற்றுச்
சகல கலை வாணனாய்த்
திகழ்ந்த பாண்டியனார்-
பந்தடிகள் பல கண்டு
பாடசாலை புகழ் பரப்பி
பௌதிகத் துறையினிலே
பட்டமதைப் பெற
பல்கலைப் படிப்பினைத்
தொடர்ந்து
பௌதீகத் துறையினில்
பாண்டித்திய முடையவ
ராய்
பி. எஸ். ஸி. பட்ட
மதைப் பெற்று

●

தானங்களிலே மிக்க
தான மெனும்
அறிவுத் தானமதைத்
தக்க தாகக் கொடுத்தவ
ஈழத்து அறிஞர் பலர்
ஈன்ற யாழ். இந்து தனில்
ஆசிரியனாய்ப் புகுந்து
கடமை எனும் சொல்
தவறு வழி நடத்திக்
கற்பித்து நற்
பொறியியலாளர்கள்
வைத்திய கலாநிதிகள்
வக்கீல் கள் தந்த
நற்பெருமை தனை
யுடையாய்!

●

புலமைகள் பல பெற்று
புகழ் ஓங்கும் வேளை
யாழ்.இந்து உப அதிபராய்
உயர் பதவி பெற்று
பல் துறையறி ஞனாய்ப்
பார் போற்றும் வேளை
நைஜீரியா எனும் நல்
நாடு அழைப் பேற்று
நல் உயர் பதவி ஏற்கச்
செல்லும் வேளை
நன்றே இறைவன்
துணைகொண்டு
ஈழத்துப் பெருமை தனை
நன்றே நானிலம்
பரப்ப வாழ்த்துகிறோம்
வாழ்க! வாழ்க!

**ஆ. திருமுருகன்**
(யாழ். இந்துக்கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
**தனிப்பிறவி**
(புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-விஜயகுமாரி
**சாந்தி**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
எஸ்.எஸ். ஆர். விஜயகுமாரி நடித்த **சாரதா**

**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7642
ஜய்...ஸ்ரீதேவி...ராதா
இன்று மட்டும் **டாக்ஸி டிரைவர்**
...வர்ணத் திரையோவியம்...
28-1-80 THE TAKING OF PELHAM-1-2-3

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30, சனி, ஞாயிறு 2-30
சிவாஜி- னி பொன்சேகா
ஸ்ரீதேவி-ஜெய்சித்ரா
ஜெய்கணேஷ்- விஜயகுமார்
**பைலட் பிரேம் நாத்**
(கலர்)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ர ஜ -புஷ்பலதா நடித்த
**புகுந்த வீடு** (புத்தம்புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-15, 4-15, 7-00, & 9-30
போன்: 7693
**Zoltan Hound of Dracula**

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
**கற்புக்கரசி**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
கடைசி வாரம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30, 6-15, 9-45.
சிவாஜி,
சுஜாதா,
விஜயகுமார்
**தீபம்**
Coming Soon - AIR PORT
FRAMED

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா,
தேங்காய் சீனிவாசன் நடிக்கும்
6-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் **சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

3rd & FINAL WEEK
**REGAL** (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN. YORK SUSANNAH
**SKY RIDERS**
Next: ONE FLEW OVER THE CUCKOO'S NEST

வெற்றிகரமான 3-வது ஜனத்திரள் வாரம்
**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
**தேவதாஸ்**
முன்னர் பார்த்து மீண்டும் பார்க்கத் துடிப்போரும் தவறவிட்டு ஏங்குவோரும் அடுத்துவந்த இளம் சந்ததியாரும் கண்டு களிக்க கிடைத்த கடைசி சந்தர்ப்பம் இதுவே.
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கட்டுகளுக்கு முந்துங்கள்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லாகவே கருதப்படல் வேண்டும். இது உள்ளுறை உவமம் மூலம் சக்தியை வியந்து கூறுகிறது. காதலன் காதலியை வர்ணிப்பது போலிருப்பினும் உண்மையில் சக்தியின் அற்புதத் தன்மையை படம் பிடித்துக் காட்டும் பாரதியின் படைப்பே இக் கவிதை. இயற்கை மூலம் கடவுளை காட்டுகிறான் கவிஞன்.

## 8. சுவைகள்

''நகையே அழுகை
இழிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம்

# கொரில்லா......

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது... அங்கு ஒரு இராட்சத உருக்கொண்ட கழுகு வந்தது! அருகில் வந்ததும் கிளியை நோக்கி 'நீ வேலனின் நண்பன்தானே! நானும் அவனது நண்பனே. எனது பெயர் 'பக்கான்' நான் அவனுக்கு ஒருமுறை ஆபத்தில் உதவுவதாக வாக்களித்தேன். தற்போது அவனுக்கு ஆபத்தென்பதை அறிந்து இங்கு வந்துள்ளேன். உனக்கு ஏதும் உதவி தேவையா? என்றது.

இதைக் கேட்டு மகிழ்ந்த கிளி, தற்பொழுது நான் கிழக்கே ஆயிரம் மைல்தொலைவிலுள்ள இந்துசமுத்திரத்தை விரைவாக அடையவேண்டியுள்ளது. எனக்கு உதவிபுரிவாய்தானே.

'சரி' என அது மேலும் தன் உருவை பெரிதாக்கிக் கொண்டு கிளியை ஏற்றிக் கொண்டு 'விர்...ர்' என வானில் கிளம்பிச் சிறிது நேரத்தினுள்ளேயே ஆயிரம் மைல்களையும் கடந்து இந்து சமுத்திரத்தை அடைந்தது!

'நன்றி நண்பா! நீ சென்று வா. நான் அழைக்கும்போது வா!' என்றது கிளி. கழுகும் விடைபெற்றுக்கொண்டு மின்னலென வானில் கிளம்பி மறைந்தது! (வளரும்)

# 869வது கிரிக்கட்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதனையை உலகில் எவருமே நிகழ்த்தவில்லை.

ஒரு வருடத்தில் ஆயிரம் ஓட்டங்களை இவர் 3 தடவை பெற்றுள்ளார். இதுவரை தோல்வியையே காணாத இவர் தலைமை வகித்து ஆடிய 18 டெஸ்ட்களில் இந்தியக் கோஷ்டிக்கு 6 டெஸ்ட்களில் வெற்றி கிடைத்திருக்கிறது 12 டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

இத்தனை பெருமையுடனும் புகழுடனுமே தமது தலைமைப் பதவியை வேறொருவருக்கு கையளிக்க அதாவது காப்டன் பதவியை ராஜினாமாச் செய்ய இப்போது முன்வந்துள்ளார் கவாஸ்கர்.

கவாஸ்கரின் இந்த அறிவிப்பு கிரிக்கட் ரசிகர்களின் உள்ளங்களைச் சிதறடிக்கும் அதிர்வேட்டாக அமைந்துவிட்டது.

இந்த அதிர்வேட்டு இந்திய கிரிக்கட் ரசிகர்களை மட்டுமல்ல, உலகின் ஏனைய நாட்டு-குறிப்பாக இலங்கை ரசிகர்களின் உள்ளங்களையும் சுக்கு நூறுக்கிவிட்டது.

சாதனைகள் பலவற்றை தொடர்ந்து செய்துவரும் கவாஸ்கர், இதுவரை வெளிநாடுகளுக்குச் சென்ற இந்தியக் கோஷ்டிக்கு தலைமை தாங்கிச் செல்லவில்லை.

உள்ளூரில் தமது திறமையினால் இந்தியாவுக்கு பெரும் புகழைத் தேடித் தந்த கவாஸ்கர் வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியக் கோஷ்டிகளுக்கும் தலைமை தாங்கிச் சென்று சாதனைகள் பல புரிவார் என எதிர்பார்த்திருந்த ரசிகர்களுக்கு அவரது ராஜினாமாச் செய்தி பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

# மாதிரிக் கவிநயம்

வெருவி உவகையென்று
அப்பாலெட்டே
மெய்யப்பாடென்ப......''

எனும் தொல் காப்பியச் சூத்திரப்படி சுவைகளை எடுத்து நோக்கின் இப்பாடலிலே சிருங்காரம்-உவகை எனும் சுவை மேலிட்டு நிற்கிறது. காதல் பேச்சொலியால் சிருங்காரம் மேலிடினும் கண்ணம்மாவின் அழகு கோலத்தை மனதில் நிறுத்திப் பார்க்கையில் அற்புதம்-மருட்கை சுவையும் சேர்ந்தே பிறக்கிறது. மேலும் பாரதி செஞ்சுருட்டி ராகத்தில் பண் அமைத்திருப்பது இச் சுவைகளுக்கு உயிரூட்டுகின்றது.

## 9. கவிதை உணர்த்தும் உண்மை

சக்தி மேல் பாரதி கொண்ட பக்தியின் பரிசே இப்பாடல். இறைவன் என்ற உண்மைப் பொருளை நாயக நாயகி பாவத்தால் பாடல் காட்டுகிறது.

மேலும் இப்பாடல் பிறந்த காலத்தில் பாரதத்தில் சாத்திரம் என்னும் போர்வையில் சாதி வெறி தாண்டவமாடி இறைவனையும் அவன் மெய்யடியார்களையும் பிரித்துவைத்து இப்பாடலின் இறுதிப்பகுதியில் 'சாத்திரம் ஏதுக்கடீ' எனச் சீறும் பாரதி அன்பிதயம் ஒன்றே ஆண்டவனை அணைத்திடத் தேவை என்பதை அழகாகக் காட்டி சமுதாய உணர்வைத் தூண்டிவிடுகிறான். சமுதாயப் புரட்சியின் முன்னணிப் பாவலன் அல்லவா பாரதி?

மேலும் இக்கவிதை காலத்தின் தேவை என்றே கூற வேண்டும். விடுதலை வேட்கையுற்ற பாரத மக்கள் சொல்லொணு இன்னல் அனுபவித்த வேளையிலே பாட்டால் மக்கள் வாட்டம் போக்கிடத் துடித்த பாரதி, அன்று பாரதப் போர் நடாத்திய கண்ணனைக் காட்டி அதுபோல இன்னும் கண்ணன்-கடவுள்,- நீதியை வெல்லவைப்பான் என்று காட்டவே இப்பக்திப் படைப்பைப் படைத்தான்.

# யாழ். நகரில் மீண்டும் பாண் 'கியூ'

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சில தினங்களாக மாவுக்கும் பாணுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

நேற்றுமாலை பாண்வாங்குவதற்கு யாழ். நகரிலுள்ள பேக்கரியொன்றின் முன்னால்நீண்ட கியூ வரிசை காணப்பட்டது. (கெ-இ)

# புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

லங்கா தொழிற்சங்கங்களின் வடபிரதேச மாநாடு திரு. அ. வயித்திலிங்கம் தலைமையில்நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. அ. வைத்திலிங்கம், உபதலைவர்கள்: திரு. எஸ். சிற்றம்பலம், திரு. அ. தாமோதரம்பிள்ளை, காரியதரிசி: திரு. எஸ். விஜயானந்தன், உதவி காரியதரிசி: திரு. க. குலராசசிங்கம், அமைப்பாளர்: திரு. ரி. பரம்ஆனந்தம், உதவி அமைப்பாளர்; திரு. எஸ். இராசதுரை, பொருளாளர்: திரு. அ. பாலசுப்பிரமணியம். (அ)

ஆகவேதான் காலத்தால் அழியாததன்மை கொண்டு இப்பாடல்கள் இலங்குகின்றன.

'கண்ணன் காதலன்'
எனக்கொரு
கனியமுதமடா
விண்ணமுதமுமே-அதனை
வெல்ல மாட்டாதடா'

எனுமளவிற்கு இப்பாடல்கள் அமுதூற்றுக்களாய்த் திகழ்கின்றன.

-செல்வி நிருஜ
செபஸ்தியாம்பிள்ளை
ஆசிரியை
(புனித. வின்சன்ட்
பொரஸ் பாடசாலை
ஹொரணை)

## ஓர் முக்கிய அறிவித்தல்

230 A, நாவலர் ரோட், என்ற இல்லத்தில் அடைவு பிடித்த தி. நவரத்தினம் ஆகிய நான் அடைவுபிடிப்பதை நிறுத்திவிட்டேன் என்றும் என்னிடம் அடைவு வைத்தவர்கள் பங்குனி மாதம் முதலாம் திகதிக்கு (1-3-80) முன் மீட்கப்படாமல் இருக்கும் அடைவுகளை அடைவு துண்டுகளுடன் வந்து மீட்டுக்கொள்ள வேண்டும் என்றும், இந்த அறிவித்தலின் மூலம்கேட்டுக் கொள்கிறேன்.

தி. நவரத்தினம்,
முகாமையாளர்.

4745

# VACANCIES

Applications are invited for the following posts from the citizen of Sri Lanka.

| | | |
|---|---|---|
| 1. | Manager Industries | Grade I. |
| 2. | Manager Consumer Supplies | Grade II. |
| 3 | Manager Establishment | Grade II. |
| 4. | Accountant | Grade II. (02 posts). |

For qualifications and Salary scales please refer to Republic of Sri Lanka Gazette Extra Ordinary No. 15009/12A of 12th. May, 1972. Salary negotiable according to the Qualifications and Experience. Applications should be made on the specified form obtainable from the undersigned. Further particulars could be obtained from the Society's Office at Pandaterupppu. Postal request for application forms and other particulars should be accompanied by a self addressed stamped envelope 9" x 4" in size.

Closing date of application: 12-02-1980.

**General Manager**
PANDATERUPPU PARISH M. P. C. S. LTD.
PANDATERUPPU.

4710

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது!

**விஞ்ஞானம் 7-ம் வகுப்பு**

ஐ. ஜெகநாதன் எழுதியது
(சேவைக்கால விஞ்ஞான ஆலோசகர்)

1980-ம் ஆண்டு 7-ம் வகுப்பு மாணவர்களுக்குரிய முழுப்பாட அலகுகளையும் உள்ளடக்கியுள்ளது.

விற்பனையாளர் & விநியோகஸ்தர்

**ச. தில்லைராசன்**
யுனைற்ரெட்ஸ் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை. 4775

# பராளுமன்றம் 15நிமிடங்கள் கூடியது
# பண்டிதரின் தமிழ்க்கேள்வியும் பிரதி அமைச்சரின்பதிலும்

(கொழும்பு)

நேற்று முன்தினம் பாராளுமன்றம் 15 நிமிடங்கள் மாத்திரமே கூடியபின் அடுத்த மாதம் 5-ம் திகதிக்கு ஒ. தி போடப்பட்டது.

ஒத்திவைப்புப் பிரேரணை எடுக்கப்பட்டபோது ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் யாழ். அரசாங்க அதிபருக்குத் தாம் எழுதிய கடிதம் ஒன்று பற்றிய கேள்வியை எழுப்பினார். இக்கேள்விக்குப் பிரதி பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. பேர்ஸி சமரவீர சிங்களத்தில் பதிலளிக்க முற்பட்டார். திரு. இரத்தினம் பிரதி அமைச்சர் ஆங்கிலத்தில் பதிலளித்தால் நல்லது என்றும் அது தாம் துணைக்கேள்வி எழுப்புவதற்கு உதவியதாய் இருக்குமென்றும் கூறினார். என்றாலும் பிரதி அமைச்சர் சிங்களத்திலேயே பதிலளித்தார்.

இதைத் தொடர்ந்து திரு. இரத்தினம் துணைக் கேள்வி ஒன்றைத் தமிழில் கேட்டார். ஆனால் பிரதி அமைச்சர் அதன் மொழிபெயர்ப்பை அங்குள்ள மொழிபெயர்ப்பு கருவிமூலம் செவிமடுக்காமல் பேசாமலிருக்கவே பிரதி சபாநாயகர் திரு. நோர்மன்வைத்தியரத்ன உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளிக்கும்படி பிரதியமைச்சரிடம் கூறினார்.

அக்கேள்வி தமக்கு விளங்கவில்லையென்று பிரதியமைச்சர் அப்போது தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் குறுக்கிட்டு, பிரதியமைச்சரின் இந்தக் கூற்று தமிழ் உறுப்பினர்களை அவமதிப்பதாக விருகின்றதென்று கூறினார்.

இந்தக் கட்டத்தில் பிரதம மந்திரி குறுக்கிட்டு இந்தச் சபையில் உறுப்பினர்கள் மூன்று மொழிகளிலும் பேசுவதற்கு உரிமையுண்டு அவைகளைக்கேட்டு பதிலளிக்க வேண்டியது எமது கடமை என்று தெரிவித்தார். இதற்கு பிரதியமைச்சர் திரு. பேர்ஸி சமரவீர உறுப்பினர் என்னை ஆங்கிலத்தில் பேசும்படி எப்படி வற்புறுத்தமுடியும் என்று கேட்டார். சம்பந்தப்பட்ட கடிதம் அரசாங்க அதிபருக்கு கிடைக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

கடிதம் தொலைந்திருந்தால் அது விசாரிக்கப்படுமா என்று பண்டிதர் கேட்டார். இது தபாலமைச்சரின் வேலை என்று பிரதி அமைச்சர் தெரிவித்தார். கச்சேரி சம்பந்தப்பட்ட விஷயம் என்றபடியால் பொதுநிர்வாக அமைச்சு இதைச் செய்யமுடியும் என்று திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டினார். (ம)

விற்பனையாகின்றன!

**7-ம் வகுப்பு**
**விஞ்ஞானம்**

1980-ம் ஆண்டுக்குரிய 7-ம் வகுப்பு மாணவரது பாடப்பரப்பு முழுவதையும் கொண்டது.

வியாபாரிகட்கும், ஆசிரியருக்கும் விசேட கழிவுண்டு.

விநியோகஸ்தர் & விற்பனையாளர்-

S. Thillairasan
United Stores & Book Depot
Point Pedro. 4775

# ஓடும் பஸ்ஸிலிருந்து விழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

உறவினர் ஒருவரின் மரண வீட்டிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய 35 வயது நபரொருவர் ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து நிலத்தில் விழுந்து மரணமானார்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதி - பருத்தித்துறை வீதிச் சந்தியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த மரியாம்பிள்ளை துரைசிங்கம் (35 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

ஸ்தலத்திலே மரணமான இவரது மரணவிசாரணையை யாழ்- மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்ஸிஸ் நடத்தினார்.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து பலாலி நோக்கிச் சென்ற பஸ்ஸிலேயே இவ்விபத்து நடைபெற்றது.

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி சோமசுந்தரம்

நல்லூர் எஸ். எஸ். சோமசுந்தரத்தின் (R. M. P. இராணை இலுப்பைக்குளம்) அன்பு மனைவியும், சியாமளா, முரளீதரன் (St. Johns Academy) ஆகியோரின் தாயாருமான பத்மாவதி இறைவன் திருவடிகளை யடைந்தார். இவர் இளைப்பாறிய கல்வி அதிகாரி (மலேசியா) எஸ். செல்வநாயகத்தின் மூத்த மகளும், புஷ்பா செல்வநாயகம் (யாழ். இந்துமகளிர் கல்லூரி), டாக்டர் எஸ். செல்வேந்திரா (அவுஸ்திரேலியா) எஸ். ஹரிச்சந்திரன் (கணக்காளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று (27-1-80) மாலை 4-00மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: எஸ். செல்வநாயகம்
151, கோவில் வீதி,
நல்லூர்.

4809



இன்று திறப்புவிழா

# திருநெல்வேலி சென்ட்ரல் நேர்ஸிங் ஹோம்

நொதேர்ன் பீச் ஹோட்டல் லிமிட்டெட்
ஸ்தாபனத்தின் இயக்குநர்கள் சபையினர்
இன்று (27-1-80) ஞாயிறு மாலை 6 மணிக்குவரும் சுபவேளையில்
தங்கள் புதிய நிறுவனமான

# சென்ட்ரல் நேர்ஸிங் ஹோம்

(திருநெல்வேலி - யாழ்ப்பாணம்)

திறந்துவைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றனர்

# நொதேர்ன் பீச் ஹோட்டல் லிமிட்டெட்

350, பலாலி வீதி -- யாழ்ப்பாணம்

தொலைபேசி: 8225

மெம்பர் ஒவ் த
சாமி குறூப்

4805

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49. Tlegram Eelanaadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org